நூலகத்துறைப் படிப்பகம்
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நூலகத்துறைப் படிப்பகம்

பக்கம்: எட்டு
விலை ரூபா 5.00

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 தை 29 ஞாயிற்றுக்கிழமை ( 11-02-2001 ) தொலைபேசி: 3378 ஒலி: 54

அழகிய தங்க நகைகளை
உங்கள் எண்ணம்போல்
தெரிவுசெய்திட
**அர்ச்சனா ஜுவலர்ஸ்**
176/1, நாவலர் வீதி,
118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1455)

## புலிகளை தடைசெய்ய வேண்டாம் பிரிட்டிஷ் பிரதமருக்கு அவசர பக்ஸ்

### 11 தமிழ்க் கட்சிகள் இன்று அனுப்பும்

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளை பிரித்தானியா தடைசெய்யவேண்டாம் என்று பதினொரு தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் ஒப்பமிட்டு பிரித்தானிய பிரதமர் ரொனி பிளேயருக்கு அவசர பக்ஸ் செய்தி ஒன்றை இன்று அனுப்பி வைக்கவுள்ளனர்.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும், மற்றும் அங்கம்வகிக்காத 11 தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் நேற்று மாலை அவசரமாகக் கூடி விடுதலைப்புலிகளை பிரித்தானியா அரசு தடைசெய்யக் கூடாது எனக் கூட்டாக எடுத்த தீர்மானத்தையே பிரித்தானியப் பிரதமருக்கு அனுப்பவுள்ளனர். (8ம் பக்கம் பார்க்க)

### றோகணாவை கைதுசெய்தபோது 123 கிலோக்கிராம் தங்கமும் பிடிபட்டது

(கொழும்பு)

ஜே.வி.பி.யின் தலைவர் றோகண விஜேவீரவைக் கைது செய்தபோது அவருடன் 123 கிலோக்கிராம் தங்கமும் கைப்பற்றப்பட்டது.

1987 — 89 காலப்பகுதிகளில் ஜே வி.பி. யினர் அப்பாவிமக்களை கொலை செய்தும் பெருமளவு கொள்ளைகளில் ஈடுபட்டிருந்தனர்.

கைப்பற்றப்பட்ட 123 கிலோகிராம் தங்கம் இப்போது எம்மிடம் பத்திரமாக உள்ளது. அதனை வைத்து நாம் இளைஞர் நிதியம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளோம். இவ்வாறு விவசாயக்கடன் ஒத்திவைப்புப் பிரேரணையின்போது பேசிய சமுர்த்தி இளைஞர் விவகார கிராமிய அபிவிருத்தி அமைச்சரும் பிரதிநிதி திட்டமிடல் அமைச்சருமான எஸ். பி திஸநாயக்கா தகவலை வெளியிட்டுள்ளனர். [ம]

# ★ பிரதமர் வாஜ்பாய், மற்றும் அமைச்சர்களை தமிழ்த் தலைவர்கள் நேரில் சந்திக்க இந்திய தூதரகம் அனுமதி மறுப்பு!

## அரசுக்கு அழுத்தம் கொடுக்க இந்தியா பின்னடிப்பு

(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப்புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பிற்கு செவி சாய்த்து அரசும் யுத்த நிறுத்தம் செய்ய வேண்டுமென்பதுடன் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கும் இந்திய அரசு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென இந்தியப் பிரதமர் வாஜ்பாயையும் மற்றும் முக்கிய அமைச்சர்களையும் நேரில் சந்தித்து கோருவதற்கு பதினொரு தமிழ்க்கட்சிகள் விடுத்த வேண்டுகோளை கொழும்பில் இந்தியத் தூதரகம் நிராகரித்துள்ளது.**

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக சமாதானப் பேச்சு வார்த்தைக்கு முன்னோடியாக தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்துள்ள யுத்த நிறுத்த அறிவிப்பை ஏற்று யுத்த நிறுத்தம் செய்து விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும் என்றும இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க கோரும் தீர்மானத்தை பல்வேறு நாடுகளின் தூதுவர்களை நேரில் சந்தித்து பதினொரு தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இதனடிப்படையிலேயே இந்தியப் பிரதமர் மற்றும் முக்கிய சிரேஷ்ட அமைச்சர்களையும் நேரில் சந்தித்து இக்கோரிக்கையை விடுப்பதற்கு இந்திய தூதுவரிடம் விடுத்த வேண்டுகோள் தூதரகத்தினால் நிராகரிக்கப்பட்டுவிட்டது.

இந்த நிராகரிப்பிற்கான காரணங்களை இந்தியத் → 8ஆம் பக்கம் பார்க்க

## ராணுவத்தினரின் சூட்டுக்கு வாய் பேசாத சிறுவன் பலி!

### புத்தூரில் சோக சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிபிரயோகத்திற்கு இலக்காகி வாய்பேச முடியாத சிறுவனொருவன் உயிரிழந்துள்ளான்.

இத்துயரச்சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு 12.10 மணியளவில் புத்தூர் மேற்கு பகுதி இராணுவக் காவலரணுக்கருகில் இடம்பெற்றது. இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது, பிரஸ்தாப சிறுவன் →8ஆம் பக்கம் பார்க்க

## யாழ். பல்கலைக்கழக மாணவரின் சுற்றுலாவுக்கு படையினர் அனுமதி மறுப்பு

(வடமராட்சிகிழக்கு)

யாழ் குடா நாட்டிலிருந்து வெளி மாவட்டங்களுக்கு சுற்றுலா செல்வதற்கு விண்ணப்பித்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது

பயண அனுமதி வழங்கும் விடையத்தில் படைத்தரப் →8ஆம் பக்கம் பார்க்க

## கைதாகும் தமிழர்களுக்கு சட்ட உதவி வழங்கப்படும்

### நீதி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

சந்தேகத்தின் பேரில்பொலிசாரால் கைது செய்யப்படும் தமிழர்களை விடுவிப்பதற்கான சட்டஉதவிகள் அரசால் வழங்கப்படுமென நீதிஅமைச்சரும், தொல்லை தவிர்ப்புக் குழுவின்தலைவருமான பட்டி வீரக்கோன்தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிக்காகுமாரதுங்காவின் உத்தரவின் பேரிலேயே இச்சட்டஉதவிகள் (→ 8ஆம் பக்சம் பார்க்க)

## தென்பகுதி பிரச்சாரத்தை பிரிட்டன் நிராகரித்தது

தமிழீழ விடுதலைப்புலிகளை பிரித்தானிய அரசு தடைசெய்யும் சாத்தியம் இருப்பதாக வெளிவந்த செய்திகளை இலங்கையில் உள்ள பிரித்தானிய தூதரகம் நிராகரித்துள்ளது.

தமிழீழவிடுதலைப்புலிகளை பிரித்தானியஅரசு தடைசெய்யவேண்டுமெனபௌத்த பேரினவாதக் கட்சிகள் பிரித்தானிய அரசைக் கோரியிருக்கும் இவ்வேளையில் நேற்று பிரித்தானியாவில் விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்படுமெனவெளியான பிரச்சாரத்தை பிரித்தானிய தூதரகம் நேற்று நிராகரித்தது.

இதேவேளை பிரித்தானியா விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடைசெய்யக்கூடாது என தமிழ்கட்சிகளும் மற்றும் பல்வேறு அமைப்புக்களும் கோரியது தெரிந்ததே. (வ)

## ஜனாதிபதி கட்டும் மாளிகையை நிறுத்தாவிட்டால்நான் நிறுத்துவேன்!

### ரணில் விக்கிரமசிங்க சூளுரை

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் மாபெரும் மக்கள் சக்திக்கு செவிமடுத்து மார்ச் மாதத்துக்குள் பதவி விலக வேண்டும். இல்லையேல் தேசிய எதிர்ப்பு இயக்கத்தின் மூலம் பதவி விலக்குவேன்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் கொழும்பு மாநகர சபை மைதானத்தில் இடம் பெற்ற பாதயாத்திரையின் இறுதிக் கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இன்று இம் மைதானத்திலே பெருந்திரளான பொலிசாரும் தண்ணீரை வேகமாக விசிறும் பீரங்கிகளும் குவிக்கப்பட்டுள்ளன ஏனெனில் நான் ஜனாதிபதியின் மாளி → 8ஆம் பக்கம் பார்க்க

## அவுஸ்திரேலிய தூதுவராக ஜானக பெரேரா நியமனம்?

(கொழும்பு)

இராணுவ சேவையில் இருந்துஇளைப்பாறிய மேஜர் ஜெனரல் ஜானகபெரேரா அவுஸ்திரேலியாவிற்கான இலங்கைத் தூதுவராக நியமனம் பெறவுள்ளார்.

உயர் பதவிகளுக்கு நியமனம் செய்யும் பாராளுமன்றக் குழு →8ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 400 ரூபா கொடுப்பனவு கோரி
# தொழிலாளர் சத்தியாக்கிரகம்

(கொழும்பு)
சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றினை நடத்த தோட்டத் தொழிலாளர்கள் திட்டமிட்டுள்ளதாக கால்நடை, அபிவிருத்தி, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நாணய மதிப்பிறக்கத்துக்கு ஏற்ப தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்குவதென உறுதியளிக்கப்பட்ட 400 ரூபா அலவன்ஸ் எதிர்வரும் 18 ஆம் திகதிக்குள் வழங்கப்படாவிட்டால் 19 ஆம் திகதி காலை ஹற்றனில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி இப்போதைய தொழில் அமைச்சர் அலவி மௌலானா, தொழிலாளர்களுக்கு 400 ரூபா கொடுக்க வேண்டும் என்று கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.
(உ)

## ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)
யாழ் இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர் மன்றத்தின் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வு இன்று மு. ப. 9 30 மணிமுதல் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.
(உ- 104)


## சிறு விளம்பரம்

### செவ்வாய் மாற்றமும் சனிவக்கிரமும்

எங்கும் விற்பனையாகின்றன. ரூ 10- யுத்தச் செவ்வாய்-வக்கிர நீகச் சனியின் கெட்ட பார்வையகன்றதால் பூகம்பம், சூறாவளி, இயற்கையழிவுகள், உள்நாட்டும் போர்கள் ஓயும். சத்யா ஆனைக்கோட்டை, தொலைபேசி 021-2753.
(2520)

### பணிப்பெண் தேவை

கத்தோலிக்கசிறியகுடும்பம் ஒன்றிற்கு சமையல் செய்யக்கூடியபெண் தேவை சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும் தொடர்பு:- 19 புவனேஸ்வரி அம்பாள் வீதி நல்லூர் கிழக்கு யாழ்ப்பாணம்.
(2521)

மருதனார்மடம்
C.B I
கல்வி நிலையத்தில்
தற்போது
AAS கல்வியகம்
வெள்ளி 2001 02 09 முதல் ஆரம்பித்துள்ளதை மாணவர்களுக்கு மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்
நிர்வாகி
(கி/1479)


## இராசி பலன்

11.02.2001
தை 29, ஞாயிறு
திருதியை மு ப. 7 13வரை
சதுர்த்தி பி.இ 5 34 வரை
உத்தரம் பி. ப.4:37வரை
இராகுகாலம் 5 34– 7 02
சுபநேரம் 10.03-11.33
அமிர்தம், சங்கடகரசதுர்த்தி

**மேடம்**
புதிய முயற்சி, எதிரிகள் விலகுவர், காரியம் கைகூடும், சந்தோசமான சம்பவம்.

**இடபம்**
தாழ்வு நிலை, காரிய இடையூறு, வியாதி, நிலை மாற்றம்.

**மிதுனம்**
தன்நம்பிக்கைக் குறைவு, அதிகாரிகள் வெறுப்பு, பயந்தசுபாவம், காரிய தாமதம்.

**கடகம்**
பிரயாணம், சகோதரர் உதவி, தன வரவு, வாக்கு மேன்மை.

**சிங்கம்**
வாக்குச்கலகம், தனவிரயம், முயற்சி தாமதம், கௌரவக் குறைவு.

**கன்னி**
தெய்வ சிந்தை, வசீகரம், சயன சுகம், நல்ல உணவு கிடைத்தல்.

**துலாம்**
கோபப்படுசல், சுபசெலவு, காரியதாமதம், ரோகம்.

**விருச்சிகம்**
நினைத்த காரியம் கைகூடும், தனலாபம், மன மகிழ்ச்சி, கீர்த்தி.

**தனுசு**
தொழில் மேன்மை, அதிசாரம், மனக் கவலை, பிறர் உதவி.

**மகரம்**
உஷ்ண வியாதி, கட்டுப்பாடு, அச்ச நிலை, பிரயாணம்.

**கும்பம்**
முயற்சிதாமதம், வீண்பிரச்சினை, பிரயாண பயம், வியாதி.

**மீனம்**
போசன சுகம், பிரயாணம், கௌரவம், தனவரவு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)
வளவன்

## கட்டணத்தில் மாற்றமில்லை

[யாழ்ப்பாணம்]
வடமராட்சி சிற்றூர்திகள் சேவைசங்கத்தினரின் பயணக் கட்டணத்தில் எதுவித அதிகரிப்பும் மேற்கொள்ளப்படவில்லை என சங்கத்தலைவர் க. சில்வஸ்ரர் தெரிவித்துள்ளார்.
[உ]

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

இம் மாதம் 10 - ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றன

| | |
|---|---|
| 14600 டி | 14627 ஏ |
| 14627 பி | 14627 சி |
| 14628 ஏ | 14628 பி |
| 14637 ஏ | 14637 பி |
| 14638 ஏ | 14638 பி |
| 14638 சி | 14638 டி |
| 15450 பி | |

### சங்கானை

| | |
|---|---|
| 175069 ஏ | 175069 பி |
| 176882 ஏ | 176882 பி |
| 177895 ஏ | 178754 ஏ |
| 178755 ஏ | 178859 ஏ |
| 178859 பி | 178859 சி |
| 178859 டி | 178862 ஏ |
| 178862 பி | 178890 ஏ |
| 178896 ஏ | 179069 ஏ |
| 179102 ஏ | 179184 ஏ |
| 179205 ஏ | 179205 பி |
| 179346 ஏ | 179346 பி |
| 179346 சி | 179384 ஏ |
| 179394 ஏ | 179394 பி |
| 179505 ஏ | 181508 ஏ |
| 181625 ஏ | 181625 பி |
| 182585 ஏ | 182585 பி |

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 177707 ஏ | |

### நெடுந்தீவு

| | |
|---|---|
| 13721 ஏ | 13721 பி |
| 14029 ஏ | 14029 பி |
| 14558 ஏ | 14563 ஏ |
| 14563 பி | 14563 சி |
| 14563 டி | 14563 ஈ |
| 14569 ஏ | 14569 பி |
| 14569 சி | 14593 ஏ |
| 14598 பி | 14598 சி |
| 14598 டி | 14598 ஈ |
| 14615 ஏ | 14915 பி |
| 14622 ஏ | 14622 பி |
| 14623 ஏ | |

### கரவெட்டி

| | |
|---|---|
| 151122 ஏ | 151122 பி |
| 180453 ஏ | 182514 ஏ |
| 182514 பி | 182514 சி |
| 182516 ஏ | 182516 பி |
| 14451 பி | 14639 ஏ |

### ஊர்காவற்றுறை

| | |
|---|---|
| 14079 ஏ | 14079 பி |
| 14135 ஏ | 14135 பி |
| 14176 ஏ | 14207 ஏ |
| 14207 பி | 14376 ஏ |
| 14393 ஏ | 14393 பி |
| 14393 சி | 14417 ஏ |
| 14421 ஏ | 14480 ஏ |
| 14480 பி | 14481 ஏ |
| 14481 பி | 14481 சி |
| 14494 ஏ | 14513 ஏ |
| 14513 பி | 14513 சி |
| 14518 ஏ | 14525 ஏ |
| 14525 பி | 14527 ஏ |
| 14527 பி | 14528 ஏ |
| 14539 ஏ | 14539 பி |
| 14549 ஏ | 14549 பி |
| 14550 ஏ | 14551 ஏ |
| 14553 ஏ | 14553 பி |
| 14553 சி | 14556 ஏ |
| 14557 ஏ | 14557 பி |
| 14557 சி | 14578 ஏ |
| 14578 பி | 14578 சி |
| 14578 டி | 14580 ஏ |
| 14582 ஏ | 14582 பி |
| 14582 சி | 14582 டி |
| 14582 ஈ | 14582 எவ் |
| 14589 ஏ | 14590 ஏ |
| 14594 ஏ | 14600 ஏ |
| 14600 பி | 14600 சி |

### நல்லூர்

| | |
|---|---|
| 176637 ஏ | 176637 பி |
| 179105 ஏ | 179105 பி |
| 179321 ஏ | 179381 ஏ |
| 179381 பி | 179381 சி |
| 179461 ஏ | 179461 பி |
| 181415 ஏ | 181415 பி |
| 181430 ஏ | 181430 பி |
| 181499 ஏ | 181499 பி |
| 181519 ஏ | 181611 ஏ |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 178803 ஏ | 178803 பி |
| 179210 ஏ | 179290 ஏ |
| 179345 ஏ | 179352 ஏ |
| 179409 ஏ | 179410 ஏ |
| 179420 ஏ | 179498 ஏ |
| 181536 ஏ | 181544 ஏ |
| 181613 ஏ | 181613 பி |
| 181672 ஏ | 181672 பி |
| 182654 ஏ | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 178980 ஏ | 179391 ஏ |
| 179391 பி | 181467 ஏ |
| 181644 ஏ | 182597 ஏ |
| 182597 பி | |

### உடுவில்

| | |
|---|---|
| 176756 ஏ | 176756 பி |
| 178840 ஏ | 178840 பி |
| 178840 சி | 179174 ஏ |
| 179375 ஏ | 179373 பி |
| 179390 ஏ | 179390 பி |
| 179392 ஏ | 181516 ஏ |
| 181516 பி | 181522 ஏ |
| 181522 பி | 181609 ஏ |
| 182854 ஏ | |

### வேலணை

| | |
|---|---|
| 14058 ஏ | 14058 பி |
| 14126 ஏ | 14345 ஏ |
| 14345 பி | 14403 ஏ |
| 14403 பி | 14471 ஏ |
| 14491 ஏ | 14499 ஏ |
| 14499 பி | 14500 ஏ |
| 14501 ஏ | 14503 ஏ |
| 14516 ஏ | 14532 ஏ |
| 14537 ஏ | 14537 பி |
| 14540 ஏ | 14541 ஏ |
| 14541 பி | 14542 ஏ |
| 14553 ஏ | 14544 ஏ |
| 14544 பி | 14545 ஏ |
| 14545 பி | 14546 ஏ |
| 14546 பி | 14546 சி |
| 14546 டி | 14546 ஈ |
| 14546 எவ் | 15558 பி |
| 14558 சி | 14558 டி |
| 14560 ஏ | 14561 ஏ |
| 14562 ஏ | 14564 ஏ |
| 14564 பி | 14564 சி |
| 14564 டி | 14564 ஈ |
| 14565 ஏ | 14566 பி |
| 14567 ஏ | 14567 பி |
| 14570 ஏ | 14572 ஏ |
| 14573 ஏ | 14581 ஏ |
| 14581 பி | 14581 சி |
| 14601 ஏ | 14612 ஏ |
| 14613 ஏ | 14613 பி |

# மகளிர் தினத்தை ஒட்டி ஓவியப் போட்டி

(யாழ்ப்பாணம்)
சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, மகளிர் அபிவிருத்தி நிலையம் பாடசாலை மட்டத்தில்மாணவர்கட்கான ஓவியப்போட்டி ஒன்றையும், ஏனையவர்கட்கான திறந்த ஓவியப்போட்டி ஒன்றினையும் நடத்தவுள்ளது.

பெண்களின் முன்னேற்றத்திற்குத் தடையான சமூகப் பின்னணி, பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறை, வீட்டு வன்முறைகள், பெண்அடக்குமுறை வடிவங்கள், பெண்கள் முன்னேற்றம் போன்றவற்றை மையக்கருவாகக் கொண்ட ஆக்கங்களே வரவேற்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மார்ச் 3ஆம் திகதிக்கு முன்பதாக, மகளிர் அபிவிருத்தி நிலையம். 07, கே. கே. எஸ். வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.
(உ)

# ஒரு நாள் போட்டியில் இலங்கைஅணிக்கு வெற்றி

[கொழும்பு]
இலங்கை, நியூஸிலாந்து கிரிக்கெட் அணிகளிடையே வியாழக்கிழமை நடைபெற்ற 4 வது ஒரு நாள் போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்றுள்ளது

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 35 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 31 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கப்டன் ஜயசூரியா 52 ஓட்டங்களையும் தழுவித்தாரன 33 ஓட்டங்களையும் பெற்றனர்.

இப்போட்டியில்வீகிதாசார அடிப்படையில் ஓட்டங்களை வேகமாக பெற்றதனால் இலங்கை அணிக்கே வெற்றி வழங்கப்பட்டது ஆட்ட நாயகனாக சனத் ஜயசூரிய தெரிவு செய்யப்பட்டார். 5 வது இறுதிப் போட்டி இன்று கிறைஸ்சேர்ச்சில் நடைபெறும்.
[உ-110]

# கணனி தொழில்நுட்ப பூங்காவை ஆரம்பிக்க பூர்வாங்க ஏற்பாடுகள்

[யாழ்ப்பாணம்]
கணனிதொழிநுட்பப் பூங்காவினை யாழ்ப்பாணத்தில் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதற்கென கட்டடம் ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டு அதனை கணனி தொழிநுட்பப் பூங்காஇயங்குவதற்கு ஏற்றதாக மாற்றியமைக்கும் பணி தற்போது இடம் பெற்று வருகிறது

இக்கணனிதொழிநுட்பப் பூங்காநாடளாவியரீதியில் 50 இடங்களில் தாபிக்கப்படவுள்ளபோதிலும் முதன்முதலாக யாழ்ப்பாணத்திலேயே இதற்கான பணிகள்மேற்கொள்ளப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.
[உ-12]

## மனிதன் ..

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லும் மேன்மையடையலாம். அல்லது இந்த இடங்களில் உத்தியோகத்திலமர்ந்து செல்வம் சேர்க்கலாம்.

**பிறந்தஎண் 8- விதிஎண் 8**

இவர்கள் இரும்பு, வாகனம், வெளியீட்டுத் தொழிலில் முன்னேறுவார்கள். மற்றும் எழுத்து, பேச்சு, ஒப்பந்தத் தொழிலும் பொருந்தும். அல்லது இவை சம்பந்தப்பட்ட இடங்களில்வேலைக்கமர்ந்து பெருஞ் செல்வம் பெறலாம்.

**பிறந்தஎண் 8- விதிஎண் 9**

இவர்கள் அழகு சாதனப் பொருள், இரும்பு, வாகனம் போன்ற தொழிலில் முன்னேறலாம் மற்றும் பல பொருள் வியாபாரம், கமிஷன், ஒப்பந்த வேலைகள் கல் தொழிலிலும் நல்ல பொருள் ஈட்டலாம் அல்லது இவை சம்பந்தப்பட்ட இடங்களில் வேலைக்கமர்ந்து பெரும் பொருள் பெறலாம்.

# இழப்பீட்டு கொடுப்பனவு

[ஊர்காவற்றுறை]
ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த மேலும் 388 பேருக்கு அசையும் அசையாச் சொத்துக்களின் இழப்பீட்டுக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது

இவ் 388 பேருக்கும் இக்கொடுப்பனவில் முதற்கட்டக் கொடுப்பனவாக பத்தாயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது.

கொடுபனவினை பெற விண்ணப்பித்தவர்கள் தங்கள் பகுதிக்கான கிராம சேவகரிடம் சென்று பெயரினை உறுதிப்படுத்திய பின் அந்தந்த வங்கிகளில் பணத்தினைப் பெறமுடியும் என தெரிவிக்கப் படுகின்றது.
(உ-75)

# தபால் பொதிகள் கொள்ளை

(கொழும்பு)
நுவரெலியாமாவட்டகுடாஓயாப் பகுதி மேர்வின் தோட்டத்தில், தபால் பஸ் வண்டி ஒன்றை ஆயுதபாணிகள் வழிமறித்து தபால் பொதிகளில் உள்ள 2 லட்சம் ரூபா பணத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இத் தபால் பொதிகளில் ஒப்பூதியப் பணம், உபதபால் நிலையங்களின் செலவுகளிற்கான பணம் ஆகியவை உள்ளடங்கியிருந்தன.
[செ]

# ஒலிபெருக்கி மூலம் படையினர் அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம், சுன்னாகப் பகுதிகளில் நேற்றையதினம் படையினர் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது.

ஊரடங்கு வேளையில் ஆலயத் திருவிழாக்கள் நடத்தப்படுவதாயின் அருகிலுள்ள இராணுவ முகாம்களுக்கு அறியபபடுத்தி அனுமதி பெற வேண்டும் எனவும்,

விடுதலைப் புலிகளை இனம் கண்டால் தமக்கு உடன் தகவல் தருமாறும் ஒலி பெருக்கி மூலம் பொதுமக்களிடத்து கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன், இது தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டமையையும் காணக் கூடியதாய் இருந்தது. (உ-02)

# இலங்கை இனப்பிரச்சினைக்கு ஜே.வி.பி. முன்வைக்கும் தீர்வு என்ன?

## மருதூர்க்கனி கேள்வி

(கொழும்பு)

இலங்கைஇனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டங்களையும், சமாதான முயற்சிகளையும் குழப்பிக் கொண்டிருக்கும் ஜே.வி.பி. தமிழர்களின் பிரச்சினைக்கு முன்வைக்கும் தீர்வுதான் என்ன?

இவ்வாறு கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் இடம்பெற்ற அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தின்போது, தேசிய ஐக்கியமுன்னணிஉறுப்பினர் மருதூர்க்கனிசபையில் கேள்வியெழுப்பியுள்ளார்.

கடந்த ஆண்டு முன்வைத்த அரசியல் தீர்வுத்திட்டத்தையும் எதிர்த்தீர்கள், நோர்வேயின் சமாதான முயற்சிகளையும் எதிர்த்தீர்கள். ஆகவே தமிழ் மக்களின்பிரச்சினைக்கு நீங்கள் முன்வைக்கும் தீர்வுதான் என்ன?

பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் ஜஸீர் அரபாத் முன்னர் அமெரிக்காவினால் பயங்கரவாதி என அழைக்கப்பட்டார் தற்பொழுது சமாதானத்தின் தூதுவர் என அழைக்கப்படுகிறார்.

இதேபோல் வியட்நாம், கொரியா ஆகிய நாடுகளிலும் தீவிரவாதிகள் என அழைக்கப்பட்டவர்கள் இப்போது சிறந்த விடுதலை வீரர்களாக மதிக்கப்படுகிறார்கள்.

இதேபோன்றுதமிழீழவிடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனும் ஒரு நாள் விடுதலை வீரராக மதிக்கப்படலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

# வலி.கிழக்கு பிரதேச செயலக பிரிவில் நடமாடும் சேவை மீண்டும் ஆரம்பம்

(ஆவரங்கால்)

கோப்பாய் பிரதேச செயலகத்தால்கடந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட நடமாடும் சேவை இம்மாதம் முதல் மீண்டும் இடம்பெறவுள்ளது.

முன்னர் திட்டமிட்டவாறு ஒவ்வொரு மாதத்தின் முதல் செவ்வாய்க்கிழமை அச்சுவேலியிலும் இறுதிச் செவ்வாய்க்கிழமை ஊரெழுவிலும் இச்சேவை இடம்பெறவுள்ளது.

இந்த வகையில் இம்மாதம் 27 ஆம் திகதி ஊரெழு கிராம முன்னேற்றச் சங்கத்தில் இவ்வருடத்திற்கான முதலாவது நடமாடும் சேவை இடம்பெறவுள்ளதாய் சம்பந்தப்பட்ட பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை, மார்ச்மாதம் 6 ஆம் திகதி அச்சுவேலி பிரதேச சபை உபகாரியாலயத்தில் இந் நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது. (உ-57)

# மாலை நேரப் பாடசாலை மாணவர் அதிருப்தி

(இணுவில்)

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் ஒரு பகுதிதொடர்ந்தும் மாலைநேரப் பாடசாலையாக இயங்குவது குறித்து அங்கு கற்கின்ற மாணவர் மற்றும் பெற்றோர் மட்டத்தில் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெயர்வு காரணமாக மேற்படி பாடசாலை தற்காலிகமாக நெல்லியடி மத்தியமகாவித்தியாலயத்தில் காலை நேரப் பாடசாலையாகவும், இணுவில் மத்திய கல்லூரியில் மாலை நேரப் பாடசாலையாகவும் இயங்கி வருவது தெரிந்ததே.

இவ்வாறு மாலை நேரத்தில் பாடசாலை இயங்குவதால் அங்கு கல்வியைத் தொடர்கின்ற மாணவர்கள் மேலதிக கல்வி ஊக்கச் செயற்பாடுகளுக்கு தனியார் கல்வி நிறுவனங்களை நாட முடியாத நிலை எழுந்துள்ளது.

இதன் காரணமாக பிள்ளைகளுடைய கல்வித்தரத்தில் பெரும்வீழ்ச்சி அடைந்திருப்பதை அவதானிக்க முடிவதாகவும் பெற்றோர் மட்டத்தில் தெரிவிக்கப்படுகிறது. (உ-124)

# மாதாந்த உதவு தொகை

கோப்பாய் பிரதேச செயலகபிரிவிற்குட்பட்ட காசநோய், தொழுநோய், புற்றுநோயால் பாதிக்கப்பட்டு மாதாந்த உதவுதொகை பெறுவோருக்கான கொடுப்பனவுகள் கடந்த சனிக்கிழமை முதல் தபாலகங்களூடாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (உ-57)

# திருக்கேதீஸ்வரத்திற்கு மக்கள் செல்ல முடியும்

## சபையில் அனுருத்த

[கொழும்பு]

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்திற்குள் படையினர் இல்லை.

200 மீற்றர் தூரத்திற்கு அப்பாலே படையினர்நிலை கொண்டுள்ளனர். இதன் காரணமாக விசேட வைபவங்களுக்கு படையினர் அனுமதி பெற்று பொதுமக்கள் அங்கு செல்ல முடியும் எனப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்தரத்வத்த தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழனன்று பாராளுமன்றில் இடம்பெற்ற அவசரகாலச்சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தின் போது,

தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி. ஆனந்தசங்கரி திருக்கேதீஸ்வர ஆலயத்திற்குள் படையினர் இருப்பதாகவும் அவர்களை அங்கிருந்து அகற்றுமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

இதற்குப் பதிலளித்துப் பேசுகையிலேயே பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (உ-7)

# பாஸ் நடைமுறையால் பலவித இடைஞ்சல்கள்

(வவுனியா)

வவுனியாவில் உள்ள பாஸ் நடைமுறையால் பிள்ளையின் மரணச்சடங்கில் பெற்றதாய் பங்குகொள்ள முடியாத பரிதாபநிலை ஏற்பட்டுள்ளது.

பூந்தோட்டம் எட்டாம் பிரிவைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு வவுனியா மருத்துவமனையில் சத்திர சிகிச்சை மூலம் மகப்பேறு இடம்பெற்றது.

அக்குழந்தை போசாக்கின்மையால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த காரணத்தால் குழந்தை மட்டும் அநுராதபுரம் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது.

பாஸ் நடைமுறை காரணமாக தாய் கூடச்செல்ல முடியவில்லை.

இந்நிலையில் சிகிச்சை பலனளிக்காது போகவே குழந்தை இறந்து விட்டதாகவும் உறவினர் எவரும்இல்லாத நிலையில் அச் சடலம் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது. (உ-5)

# திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சுவிஸில் வாழும் வல்வெட்டித்துறை இளைஞர்களின் 25 இலட்சம் ரூபா நிதியுதவியுடன் வல்வெட்டித்துறையில் அமைக்கப்பட்ட நியூட்டன் விளையாட்டுக் கழகத்தின் விளையாட்டரங்கத்தை கடந்த புதன் கிழமை உதவி அரசாங்க அதிபர் திருமதி தி. பத்தினியம்மா திறந்து வைத்தார். (உ-104)

# சதாசிவம் மகாவித்தியாலயத்தில் சித்திரம் உடற்கல்வி ஆசிரியர்கள் இல்லை

(ஊர்காவற்றுறை)

யா/அனலைதீவு சதாசிவம் மகா வித்தியாலயத்தில் சித்திரம் உடற்கல்விப் பாடநெறிகளைப் போதிப்பதற்கான ஆசிரியர் வெற்றிடம் நீண்டகாலமாக நிரப்பப்படாது இருந்து வருகிறது.

இதனால் மேற்படி பாடங்களைக் கற்கும் மாணவர்களின் நிலை கேள்விக்குறியாகியுள்ளது.

இது விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட கல்வித்திணைக்களத்தின் கவனத்தின்கீழ் கொண்டு வந்திருப்பதாகவும் தெரியவந்துள்ளது. [உ-75]

# வடக்கு-கிழக்கில் 283 தமிழ்மொழிமூல ஆசிரியர்கள் நியமனம்

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக இருநூற்றி எண்பத்தி மூன்று பேர் நியமிக்கப்படவுள்ளனர்.

தமிழ்மொழி மூல ஆசிரியர்களை இரண்டாம் கட்டமாக நியமிப்பதற்குரிய அனுமதியைக் கல்விச்சேவை ஆணைக்குழுவடக்கு-கிழக்கு மாகாண கல்வியமைச்சிற்கு வழங்கியுள்ளதாக கல்விச் சேவை ஆணைக்குழு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந் நியமனம் க.பொ.த. (உ/த) வெட்டுப் புள்ளிகளின் அடிப்படையிலேயே வழங்கப்படவுள்ளதாக அவ் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

இந் நியமனங்கள் இம் மாத முடிவிற்குள் வழங்கப்பட்டு விடும் என மேலும் தெரிவிக்கப்படுகிறது. (செ)

# நிர்வாக சபைத்தெரிவு

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுறை இளைஞர் கழகங்களில் பிரதேச சம்மேளனத்தின் நிர்வாக சபைத் தெரிவு கடந்த வியாழக்கிழமை ஊர்காவற்றுறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில்இடம்பெற்றது.

இத் தெரிவின் போது தலைவராக ஞா. செந்தமிழ்ச்செல்வன், உபதலைவராக செல்வி ச. சுமதி, உபசெயலாளர்களாக த. சூரியகுமார், இ. ஜெயாலட் அன்ரனி பொருளாளராக சி. சிவச்செல்வன், அமைப்பாளராக அ. இருதயநேசன் மற்றும் பிரிவுத் தலைவர்கள் 4 பேரும் 5நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். [உ-75]

# பிரதான கல்விப் பணிப்பாளர் ஒருவரை நியமிக்கவும்

## இ.த.ஆ. சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

தமிழ் மாணவர்களின் கல்வி நிலை தொடர்பான விவகாரங்களைக் கவனிப்பதற்கு பிரதான கல்விப்பணிப்பாளர் நாயகம் ஒருவரை நியமிக்க வேண்டும் என இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவிற்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் கோரிக்கை விடுத்துள்ளது.

இத்தகைய அதிகாரி ஒருவரை நியமிப்பதன் மூலமே தமிழ் மாணவர்களின் சிரமங்களைக் குறைக்கமுடியும் எனவும், பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு ஒருமாதம் கடந்துவிட்ட நிலையில் தேவையான புத்தகங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டபோதிலும் அவை மாணவர்களுக்கு முழுமையாக விநியோகிக்கப்படவில்லை.

இவ்வாறான பிரச்சினைகளைக் கவனிப்பதற்கு தனியே ஒரு அதிகாரி நியமிக்கப்படுவது நன்மைபயக்கும் என அம் மகஜரில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்துள்ளார். (செ)

# நன்னீர் விநியோகம் நிறுத்தம் பல்லாயிரம் மக்கள் பாதிப்பு

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டப் பகுதியிலுள்ள அகதிமுகாம்களுக்கு வழங்கப்பட்டு வந்த தண்ணீர் விநியோகம் திடீரென நிறுத்தப்பட்டுள்ளதால் அங்குள்ள 15 ஆயிரம் மக்கள் மிகுந்த பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள்.

பூந்தோட்டப் பகுதியிலுள்ள ஒன்பது யூனிற்களிலுமுள்ள, அகதிமுகாம்களுக்கு தண்ணீர் தாங்கி மூலம் நீர் விநியோகம் செய்யப்பட்டது.

ஆனால் எந்தவித முன்னறிவிப்பின்றி நேற்று முன்தினம் காலைமுதல் நீர் விநியோகம் நிறுத்தப்பட்டமையினால் அவர்கள் இரண்டரைக்கிலோமீற்றர் தூரத்திலுள்ள அண்ணா நகர்ப்பகுதிக்குச் சென்று நீரைப்பெற வேண்டிய நிலை அகதிமுகாம் வாசிகளுக்கு ஏற்பட்டுள்ளது. (உ-5

# நாளை திறப்பு

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச்சபையினால் சுன்னாகப் பகுதியில் அமைக்கப்படும் பனம்பொருள் விற்பனை நிலையம் நாளை திறந்து வைக்கப்படும். (உ-12)

# இலவச பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

கல்வி உயர் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், யாழ் கல்வி வலயம் ஆகியவற்றுடன் இணைந்து நல்லூர் முருகன் சனசமூக நிலையம் இலவச எழுத்தறிவூட்டல், தொழிற்திறன் பயிற்சிகளை வழங்கும் திட்டம் ஒன்றினை ஆரம்பிக்கவுள்ளது. (உ

# செய்தித் துளிகள்

## நுளம்புத் தொல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ் பிரதேச செயலக சுற்றாடலில் பற்றைகள் வளர்ந்து காணப்படுகின்றன.

இதன் காரணமாக அப் பகுதியில் நுளம்புப் பெருக்கம் அதிகரித்திருப்பதனால் அயலவர்கள் பெரும் தொல்லைகளுக்குஆளாகி வருகின்றனர். (உ-12)

## அரவம் தீண்டியது

(யாழ்ப்பாணம்)

வீட்டில் இருந்தவேளை, அரவம் தீண்டியதால், உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த சுப்பையா வேல்முருகன் (வயது 34) என்பவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-104)

## அமைப்பு ஆரம்பம்

(மண்டைதீவு)

சுமார் 75 இலட்ச ரூபா செலவில் அமைக்கப்படும் கொக்குவில் பொதுச் சந்தையின் அமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (உ-11)

## பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கம் நடத்தும் பயிற்சி வகுப்புக்ள் இன்று மு.ப. 10 30 மணி முதல் யாழ். இந்துக்கல்லூரியில் வழமை போன்று நடைபெறவுள்ளது. (உ)

## கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்களின் கற்பித்தல் உபகரணங்களின் கண்காட்சி வெள்ளிக்கிழமை சாதனா பாடசாலையில் இடம் பெற்றது.

கோட்டமட்டத்தில் இடம் பெற்ற உபகரணங்கள் கண்காட்சியில் தெரிவு செய்யப்பட்ட பொருட்களே வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கண்காட்சியில் வைக்கப்பட்டன. (உ-12)

## நிர்வாக சபை தெரிவு

[மண்கும்பான்]

யா/கொட்டடி கற்குளம் 'ஸ்ரார்' சனசமூகநிலைய புதிய நிர்வாகசபைத் தெரிவு அண்மையில்இடம் பெற்றது.

புதிய நிர்வாகத் தலைவராக த. கருணாகரன், செயலாளராக பா.நிலோஜினி, பொருளாளராக ந. கண்ணதாசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். [உ-83]

## கருத்தரங்கு

(கோப்பாய்)

யாழ். வலயப் பாடசாலைகளின் பாடசாலையை அடிப்படையாகக்கொண்ட கணிப்பீட்டு வேலைத் திட்டக் கருத்தரங்குகள் நாளை திங்கட்கிழமை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் செவ்வாய்க்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியிலும் புதன் கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் காலை 9 00 மணியளவில் அதிபர், பிரதி அதிபர் பாடசாலை மட்டக் கண்காணிப்புக்குழுச் செயலாளர் ஆகியோரை பொருத்தமான இடங்களில் கலந்து கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட பாடசாலைகட்கு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ-79)

## இன்று படக்காட்சி

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக்காட்சித் தொடரில், சர்வதேச திரைப்பட விழாக்கள் பலவற்றில் பங்கு பற்றிய படமான ''SHYAM BENEGAL MANTHAN'' (THE CHUENING என்ற ஹிந்தி திரைப்படம் இன்று மு.ப. 10 மணிக்கு புவியியற் துறை மண்டபத்தில் இடம் பெறும்.

ஆர்வலர்கள் எவரும்கலந்து கொள்ளலாம் எனபுறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார் (உ)

## பெண்ணின் சடலம் கொழும்பிற்கு

(வவுனியா)

தாண்டிக்குளம் அருகே ஒரு வாரத்திற்கு முன்பாக கண்டெடுக்கப்பட்ட பெண்ணின் சடலம் மருத்துவப் பரிசோதனைகளுக்காக கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா மருத்துவமனையிலிருந்த மேற்படி சடலத்தினை மேலதிக பரிசோதனைக்காக கொழும்பிற்கு அனுப்பி வைக்குமாறு வவுனியா நீதிபதி என். இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார். (உ-5)

## கைதடி நெல் விற்பனை

(கோப்பாய்)

நீர்வேலிதரவைப் பகுதியில் தற்போது வியாபாரிகளால் நெல் கொள்வனவு செய்யப்பட்டு லொறிகளில் ஏற்றிச் செல்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

ஒரு மூடை நெல் ஆயிரத்து 400 ரூபா முதல் ஆயிரத்து 500 ரூபாவரை கொள்வனவு செய்யப் படுவதால் கைதடி வாழ் விவசாயிகள் கூலியாட்களை அழைத்துச் சென்று நெல் மூடைகளை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. [உ-79]

## திட்டமிட்டபடி பரீட்சை

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கி உத்தியோகத்தர்களின் பதவியுயர்விற்கான பரீட்சை திட்டமிட்டபடி நடைபெறும் என்றும் இதற்கான அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு விட்டதாகவும் பரீட்சைத் திணைக்கள வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் 25 ஆம் திகதியும் மார்ச் 11 ஆம் திகதியும் இப்பரீட்சைகள் யாழ் வேம்படி உயர்தரபாடசாலையில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (உ-12)

## பாடநூல்கள் தரம்பிரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட பாடநூல்கள் தரம்பிரிக்கப்படுவதாகவும் இன்னும் சில தினங்களில் அவை பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படுமெனவும் கல்விப் பணிமனைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ் இலவச பாடநூல்கள் 10 லொறிகளில் எடுத்து வரப்பட்டு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-12)

# க. பொ. த. உயர்தர மாணவர்களுக்கான உயிரியல் பாட வினாக்கள் - 01

அறிமுகம் — ஆசிரியர்: கே. சுகந்தன் B. Sc

க.பொ.த உயர்தர உயிரியல் பிரிவானது 1999 ஆம் ஆண்டுவரை தாவரவியல், விலங்கியல் என இரு பாடங்களை உள்ளடக்கியிருந்ததும் 2000 ஆம் ஆண்டில் இருந்து இவ்விரு பாடங்களும் ஒருமித்து ''உயிரியல்'' எனும் தனியான பாடமாக கற்பிக்கப்பட வேண்டும் என்ற விடயம் யாவரும் அறிந்ததே. உயிரியல் பாட விதானத்தில் ஒன்பது அலகுகள் உள்ளன அவையாவன.

அலகு
1) உயிரியலுக்கான அறிமுகம்
2) உயிர்ப்பல்வகைமை
3) தொழிற்படும் தாவரம்
4) தொழிபடும் விலங்கு
5) உயிரின் தொடர்ச்சி
6) மனிதனும் சூழலும்
7) நுண்ணங்கி உயிரியல்
8) பொருளாதார உயிரியல்
9) உயிர்ப் புள்ளிவிபரவியல்

மேற் குறிப்பிட்ட பட அலகுகளில் ''உயிர்ப்பல்வகைமை'' மாணவர்கள் மட்டத்தில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது உயிர்ப்பல்வகைமை ஓர் விசாலபாடம், அதனை எவ்வாறு படிப்பது போன்ற பல கேள்விகள் மாணவர்களது மனதில் எழுந்துள்ளதை அறியக்கூடியதாக உள்ளது 2000 ஆம் ஆண்டு ஆவணியில் உயிரியல் பாடத்திற்குத் தோற்றிய மாணவர்கள் தெய்வாதீனமாகத் தப்பிவிட்டார்கள். ஏனெனில் அவர்களது வினாப்பத்திரத்தில் மிக இலகுவான 5 பல்தேர்வு வினாக்களும் அமைப்புக் கட்டுரை வினாக்களில் இரண்டாவது வினாவாக மிக எளிய வினாவும் மாத்திரமே கேட்கப்பட்டிருந்தது. கட்டுரை வினாக்களில் இவ் அலகினுள் வினா எதுவும் கேட்கப்படவில்லை. ஆனால் இனி வரும் காலங்களில் மாணவர்கள் உயிர்ப்பல்வகைமையில் பல வினாக்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படப்போகின்றது இப்பாட அலகில் Kingdom:- Animalia வினுள் கற்பிக்கப்படும் கணங்களான Coelenterata Annelida, ArthroPoda, Nematoda Mollusca to Echinodermata Chordata போன்றவற்றை, கற்பதிலே மாணவர்களுக்கு பல சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. இப்பாட அலகை அணுகும்விதம், பாடத்திட்டத்திற்கமைவான மாதிரி வினாக்கள் போன்றவற்றை மாணவர்களுக்கு தெரியப்படுத்தும் நோக்குடன் இக் கட்டுரை வரையப்படுகின்றது.

உயிரியல் பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்பு சென்ற வருடம் யாழ்ப்பாணம் வந்திருந்த பேராசிரியர் கே.டி. அருட்பிரகாசம் அவர்கள் உயிரியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஓர் கலந்துரையாடலை மேற்கொண்டது யாவருக்கும் தெரிந்தவிடயமே பேராசிரியர் கே.டி. அருட்பிரகாசம் அவர்கள் அலகு 6 க்கான 'மனிதனும் சூழலும்' எனும் நூலை எழுதி வெளியிட்டது போன்று இம்மாதம் உயிர்ப்பல் வகைமைக்கும் நூல் ஒன்றை வெளியிடவுள்ளார். இந்நூலில் உள்ள பல விடயங்கள் அடுத்தடுத்த கட்டுரைகளில் குறிப்பிடப்பட உள்ளது உயிரியலுக்கான ஆசிரியர் கைந்நூலில் மாணவர்களுக்கு இரு கிளைச்சாவி முறையில் அங்கிகளை இனங்காணும் விதத்தை தெளிவாக விளக்கும்படி திரும்பத்திரும்பக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் ஒவ்வொரு விலங்குக் கணங்களின் தனித்துவமான இயல்புகளும் அக் கணங்களுள் அடங்கும் வகுப்புக்களில் உள்ள அங்கிகளின் தனித்துவமான இயல்புகளும் தெரிந்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இக் கட்டுரைகளில் பல்தேர்வு வினாக்கள், வெற்றிடம் நிரப்பும் வினாக்கள், கட்டுரை வினாக்கள் போன்றன தரப்படஉள்ளன. உயிரியல் பாட விதானத்தில் அலகு 8 இன்படி மாணவர்கள் சில மீன்களினதும் இறால்களினதும் வெளிப்புற இயல்புகள் அறிந்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கமைவாக 2000 A/L உயிரியல் வினாத்தாளில் 48 வது பல்தேர்வு வினா கேட்கப்பட்டுள்ளது. இவ்வாறான வினாக்களுக்கு விடையளிக்கக் கூடியளவிற்கு அறிவு மாணவர்கள் மத்தியில் குறைவாக இருப்பது அறியப்பட்டுள்ளது இச் சிக்கலை நிவர்த்தி செய்யும் நோக்குடன் கட்டுரை ஆசிரியரால் தயாரிக்கப்பட்ட 'Identification of Fishes and Prawns'' எனும் கைநூல் பாடவிதானத்திற்கமைவான மீன்களினதும் இறால்களினதும்வரிப்படங்களையும் வெளிப்புற இயல்புகளையும் உள்ளடக்கியதாக வெளியிடப்பட்டுள்ளது. இக் கைநூல் மாணவர்களுக்கு பெரிதும் பயனளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## பல்தேர்வு வினாக்கள்

1) பாகுபாட்டில் இயற்கையான அலகு பின்வருவனவற்றுள் எது?
   1) கணம்/பிரிவு 2) வகுப்பு 3) வருணம் 4) குடும்பம் 5) இனம்

2) பின்வருவனவற்றுள் எதனைக்கொண்டு நெமற்றோடுவை அனலிட்டிலிருந்து எளிதில் அடையாளங்கண்டு கொள்ளலாம்?
   1) உருளைவடிவம் 2) துண்டுபடாத உடல் 3) உறிஞ்சிகள் இல்லாமை
   4) வெளிப்பூக்கள் இல்லாமை 5) தூக்கங்கள் இல்லாமை

3) ஒரு மண்டல அவதானிப்பின் போது நன்னீர்த் தடாகம் ஒன்றில் செதிலந்த மழமழப்பான தோல், சோடி அவயங்கள், என்பவற்றைக் கொண்ட ஒரு விலங்கை ஒரு மாணவன் அவதானித்தான். இவ் விலங்கு அநேகமாகப் பின்வரும் எவ்வகுப்பைச் சார்ந்ததாக இருக்கலாம்?
   1) வகுப்பு - Osteichthyes 2) வகுப்பு - Chondrichthyes
   3) வகுப்பு - Amphibia 4) வகுப்பு - Reptilia 5) வகுப்பு - mammalia

4) இலங்கையின் உயிர்ப் பல்வகைமையின் இழப்புக்கு மிக முக்கியமான காரணமெனக் கருதப்படுவது?
   1) பூகோளம் வெப்பமடைதல் 2) வாழிடங்கள் அழிக்கப்படுதல்
   3) ஓசோன் படை அழிக்கப்படுதல்
   4) நாட்டுக்குரிய தாவரங்களை மனிதன் உணவாகக் கொள்ளுதல்
   5) உயிரின-படியிறக்கஞ் செய்யப்பட முடியாத இரசாயனப் பதார்த்தங்கள் உணவுச் சங்கிலிகள் வழியாக குவிதல்

5) அல்காக்கள், பிரையோபீற்றாக்கள் என்பவற்றின் ஒப்பிடுதல்களில் சரியானது பின்வருவனவற்றுள் எது?
   1) அல்காக்களில் முதிர்ந்த பதிய உடல் பிரிவிலியாகக் காணப்படலாம். பிரையோபீற்றாக்களில் அவ்வாறில்லை
   2) எல்லா அல்காக்களினதும் எல்லா பிரையோ பீற்றாக்களினதும் வாழ்க்கை வட்டங்கள் பல்லின அருவமுள்ள சந்ததிப்பரிவிருத்தியைக் காட்டுகின்றன
   3) அல்காக்கள், பிரையோ பீற்றாக்கள் ஆகிய இரண்டினதும் புணரித்தாவரச் சந்ததிகள் தற்போசணை செய்கின்றனவாகும் எனினும் இரண்டினதும் வித்தித்தாவரச் சந்ததிகள் தமது போசணைக்குப் புணரித்தாவரச்சந்ததிகளில் முழுமையாகத்தங்கியிருக்கும்
   4) எல்லா அல்காக்களும் எல்லா பிரையோபீற்றாக்களும் பச்சையம் a ஐ மாத்திரம் கொண்டிருக்கும்
   5) அல்காக்களின் இனப்பெருக்கக் கட்டமைப்புக்கள் பெரும்பாலும் ஒரு கலத்திலானவை பிரையோபீற்றாக்களின் இனப்பெருக்கக்கட்டமைப்புக்கள் பல கலங்களிலானவை.

6) மிகவும் ஆதியான புவிச்சரிதவியல் யுகம் பின்வருவனவற்றுள் எது?
   1) Archeozoic 2) Proterozoic 3) Messzoic
   4) Cenozoic 5) penozoic

7) தற்காலப் புவிச்சரிதவியல் யுகம் பின்வருவனவற்றுள் எது?
   1) Archeozoic 2) Proterozoic 3) Mesozoic
   4) Cenozoic 5) Palaeozoic

8) முதன் முதலில் கலம் தோன்றிய காலம்?
   1) 4.5 billion ஆண்டுகளுக்கு முன்பு 2) 4 billion ஆண்டுகளுக்கு முன்பு
   3) 3.5 billon ஆண்டுகளுககு முன்பு 4) 3.0 billion ஆண்டுகளுக்கு முன்பு
   5) 2.5 billion ஆண்டுகளுக்கு முனபு

9) முதல் முள்ளந்தண்டுளி உற்பத்தியாகியது எப்போது?
   1) Cambran 2) Ordovcian 3) Carboniferoaous
   4) Devonianian 5) Permian

10) பெரும்பாலன முள்ளந்தண்டிலிக்கணங்கள் தோன்றியது எப்போது?
   1) Cambrian 2) Ordovician 3) Carboniferous
   4) Devonian 5) Permian

(அடுத்த சனிக்கிழமை தொடரும்)

### இன்று ஒரு தகவல்

## மனத் தளர்ச்சிவேண்டாம்

வாழ்க்கையில் சில உண்மை நெறிகளைக் கட்டாயம் அறிந்து கொள்ள வேண்டும். அப்பொழுது தான்நாம் நல்ல படியாக வாழ முடியும். தோல்வி, வெற்றியை தெரிவிக்கும் முன்னறிவிப்பு, அதனால் அதனை உற்சாகமாக எதிர்கொள்ளும் மனநிலையை உருவாக்கிக்கொள்ள வேண்டும் மன வலிமையே உண்மையான பலம். எவ்வளவு பெரிய யானையை ஒரு சிங்கம் வீழ்த்திவிடுகிறது. காரணம் சிங்கத்திடம் உள்ள ஊக்கம் தான், மன வலிமை தான்.

முடியாது என்று கூறி மூலையில் உட்காருவதைவிட, முடியும் என்று முயற்சி செய்தால் நம்மால் எதையும் சாதிக்க இயலும். சோர்வுதான் நம்முடைய எல்லாச் செயல்களுக்கும் தடையாக அமைந்து விடுகிறது. டாக்டர் ஹென்றி கொத்தார் என்ற அமெரிக்க மருத்துவர் மனிதனுக்கு ஏற்படும் சோர்வைப்பற்றி ஆராய்ச்சி நடத்தினார். ஊச்க மொழிகள் கூறப்படுவதற்கு முன்பு ஒருவருக்கு இருக்கின்ற சோர்வின் அளவு- ஊக்க மொழிகள் கேட்ட பின்பு ஏற்படுகின்ற சோர்வின் அளவோடு வேறுபடுகின்றது, குறைகின்றது என்பதை முறைப்படி மதிப்பிட்டுக்காட்டினார். சுருக்கமாகச் சொன்னால் நமக்கு ஊக்குவிக்கப் பேசப்படும் பாராட்டுமொழிகளே உள்ளத்திற்கு அளிக்கப்படும் சத்தாகும்.

நம்முடைய இலட்சியத்தை அடைய உழைப்பைக் கட்டாயம் பயன் படுத்த வேண்டும். ஒவ்வொரு விநாடியையும் உபயோகப்படுத்திக் கொள்வதில் தான் வாழ்வின்முன்னேற்றமே அடங்கியிருக்கிறது. வாழ்க்கையில் நமக்கு அளிக்கப்பட்ட காலம் மிகவும் குறைவுகாலம்உயிரைப்போன்றது போனால் வராது. கடிகாரத்தில் ஒரு மணி நேரம் அடிக்கப்படும் பொழுது, நம்முடைய ஆயுளில் ஒரு மணி குறைந்து விட்டது என்று உணர்ந்து கொள்ள வேண்டும். காலம் கனியட்டும் என்று காத்திருப்பது; சோம்பேறிகளின் வாதம், காலம் கனிந்து விடும், நாமே காலத்தைக் கனிய வைக்க வேண்டும்.

பிறப்பது நமது கையில் இல்லை. ஆனால் பெயரோடும் புகழோடும் வாழ்வது நிச்சயமாக நம்கையில் தானுள்ளது ஜோதிடமோ, எண்கணிதமோ, வானிலிருக்கும் விண்மீன்களோ, கிரகங்களின் குருட்டு அதிர்ஷ்டமோ நமக்கு வெற்றியைக் கொண்டு வருவதில்லை. சளைக்காமல் உழைக்கும் நம் கைகளேவெற்றியைப் பெற்றுத்தரும் என்பதனை நன்கு மனத்தில் பதித்துக் கொள்ள வேண்டும். உண்மையிலேயே வெற்றி நம் முடைய பொறுமையை வளர்க்கும். அது நம்மேல்வைத்துக்கொண்டிருக்கும் நம்பிக்கையைக் கூட்டும் மற்றவர்கள் செய்யும் தவறுகளைப் பொறுத்துக் கொள்ளும் விசாலமான மனதை உருவாக்கும் சுயமரியாதையை வளர்க்கும்.

சோதனைகள் ஏமாற்றங்கள், தோல்விகள், எதிர்ப்புகள் போன்றவற்றைக் கண்டு ஓடி ஒளிந்து கொள்ளக் கூடாது. இவை தான் நமது திறமையை எடுத்துக்காட்டும், சந்தர்ப்பங்களை உருவாக்கும். நம்மிடம் இருக்கும் சக்தி, திறமைபோன்றவைகளை முழுக்க உபயோகப்படுத்துவதன் மூலமே சோதனையைச் சாதனையாக மாற்ற முடியும்.

நன்றி

**முத்தாரம்-97**

# காவலூரில் இளைஞர் வளநிலையம்

## உதவி கோரி அமைச்சருக்கு மகஜர்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில இளைஞர் வள நிலையம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கித்தருமாறு அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா விடம் ஊர்காவற்றுறைப் பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள இளைஞர் யுவதிகளினதும் பிரதேசத்தினதும் அபிவிருத்தி கருதி 12 இளைஞர் கழகங்கள் அமைககப்பட்டுள்ளன

அவற்றினை ஒன்றிணைத்து இளைஞர் கழகங்களின் பிரதேச சம்மேளனம் அமைத்துள்ளோம்.

இவ் இளைஞர் கழகங்களில் உள்ள அங்கத்தவர்களினதும் ஏனைய இளைஞர், யுவதிகளினதும் நன்மை கருதியும் ஊர்காவற்றுறைப் பிரதேச இளைஞர் அபிவிருத்தி கருதியும் 'இளைஞர் வளநிலையம்'' ஒன்று அமைக்க வேண்டிய தேவை உள்ளது

இதன் மூலம் இளைஞர், யுவதிகளினது கலை, விளையாட்டு, மொழி, அறிவு, தொழிற் பயிற்சி, தலைமைத்துவம் பண்புகளை மேம்படுத்த முடியும் என்பது திண்ணம்.

ஊர்காவற்றுறை இளைஞர் யுவதிகளின் அபிவிருத்திக்கு உதவி புரியும் முகமாக ''இளைஞர் வள நிலையம்'' அமைக்கத் தேவையான நிதியை தங்கள் அமைச்சில் இருந்து ஒதுக்கித்தர வேண்டும் என கோரியுள்ளனர்.

இக் கோரிக்கைகள் அடங்கிய மகஜரின் பிரதிகள் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ் மாவட்ட அலுவலக உதவிப் பணிப்பாளர், ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர். ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(உ-75)

## சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை அரசு யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும் மென்று கோரியும் விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்றும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டு மென்று கோருவதற்கு அவுஸ்திரேலிய தூதுவரை தமிழ்க் கட்சித் தலைவர் 14 ஆம் திகதி சந்திக்கவுள்ளார். (வ)

## 76 படையினர் பலி

(கொழும்பு)

இவ்வருடத்தின் தொடக்கத்தில் ஜனவரிமாதம் இடம் பெற்ற மோதல்களில் 76 படையினர் இறந்திருப்பதுடன் 492 பேர் காயமடைந்துள்ளதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார். (உ)

## பரீட்சை முடிவுகள்

(ஆனைக்கோட்டை)

யா/ தொழிநுட்ப நிறுவனத்தின் 1999/2000 கல்வியாண்டு கணக்கியலுக்கான உயர்தேசிய டிப்ளோமா இறுதிப் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

தமிழ் மொழிமூலம் தோற்றிய 11பேரும், ஆங்கில மொழிமூலம் தோற்றிய 2 பேரும இப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். (உ)

## திருப்பலி

(யாழ்ப்பாணம்)

இளவாலை போயிட்டி புனித லூர்து மாதா ஆலய திருநாள் திருப்பலி இன்று காலை 7.00 மணியளவில் இடம் பெறுகின்றது

(உ-12)

## உணவுண்டவர் மயக்கம்

(கொழும்பு)

தேங்காய் பிடுங்கியதற்கு கூலியாகக் கொடுத்த அரிசியை சமைத்து உண்ட எண்மர் மயக்கமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிவெட்டிதங்கநகர் என்னும் கிராமத்திலேயே இச் சமபவம் இடம் பெற்றுள்ளது. (செ)

## கண்ணிவெடி விழிப்புணர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் பிரதேச செயலக சமுர்த்தி உத்தியோகத்தர்களால் கண்ணிவெடி விழிப்புணர்வுக்கருத்தரங்குகள் மாணவர் மத்தியில் நடத்தப்பட்டு வருகின்றன.

இக் கருத்தரங்கு நிகழ்வு முதற் தடவையாக புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

(உ-12)

## அந்தியகால சேவை கோப்பாயில் சீரில்லை

(கோப்பாய்)

கோப்பாய் அந்திய கால சேவா சங்கத்தைப் புனரமைத்து புதியநிர்வாகத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டுமென இப் பகுதி பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இச் சங்கத்தின் பராமரிப்பிலேயே கோப்பாய் அந்தியேட்டிமடம் பிரேத ஊர்தி என்பன உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் பிரேத ஊர்தி தற்போது பராமரிப்பின்றி இருப்பதுடன். அதற்கான வாடகையும் சீரற்ற முறையில் அறவிடப்படுகிறது

இவற்றைச் சீர்ப் படுத்தி சங்கத்தின் பணிகளை வரையறை செய்து மக்களுக்கான அந்தியகால சேவையை சிக்கலின்றி வழங்க வேண்டும் எனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (உ-79)

## அனலைதீவில் தையல் பயிற்சி மகளிர் பலர் இணைவு

(ஊர்காவற்றுறை)

வடக்கு - கிழக்கு கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடத்தப்படும் தையல் பயிற்சி டிப்ளோமா இவ்வருடம் அனலைதீவில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது

தையல் பயிற்சி கடந்த மூன்று வருடங்களிலும் ஊர்காவற்றுறையிலேயே இடம் பெற்றுவந்தமை குறிப்பிடத்தக்கது.

அனலைதீவில் நீண்ட இடைவெளிக்குப்பின் மகளிர் அபிவிருத்தி கருதி தையல் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டமை மிகுந்து பயனுடையதாக கருதப்படுகிறது.

அனலைதீவில் இடம் பெறும் தையல் பயிற்சி நிலையத்தில் 48 பெண்கள் பயிற்சி பெற்று வருவதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

(2-75)

## மூன்று வீடுகளில் திருடர் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

ஒரே இரவில் அடுத்தடுத்துள்ள மூன்று வீடுகளில் திருடிச் சென்ற சம்பவம் நீர்வேலி கந்தசுவாமி கோவிலுக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இத் திருட்டுச் சமபவத்தில் துவிச்சக்கர வண்டிகள், உடுபுடவைகள் பெருந்தொகைப் பணம் என்பன களவாடப்பட்டிருப்பதாய் அறியமுடிகிறது. (உ)

## பதநீர் பொதி செய்யும் இயந்திரம் விரைவில் வரும்

### பனை அபி. சபை அதிகாரி தகவல்

(யாழ்ப்பாணம்)

பதனீர் பொதி செய்வதற்கான இயந்திரம் கொழும்பில் ஆயத்த நிலையிலிருப்பதாகவும் அதனை யாழ்ப்பாணத்திற்கு வெகுவிரைவில் எடுத்து வருவதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் பனை அபிவிருத்திச்சபை யாழ் தலைமை அலுவலக அதிகாரி தெரிவித்துள்ளார்.

பதனீர் உற்பத்திக்கு சாதகமான காலநிலை தற்போது ஆரம்பித்துள்ளதால் முதற்கட்டமாக 150 மி.லீற்றர் போத்தல்களில் அடைக்கப்பட்டு விற்பனைக்கு விடப்படவுள்ளதாகவும்,

பதனீரை மக்கள் இலகுவில் பெற்றுக் கொண்டு அதன் நன்மையை அடைவதற்கு மேலும் நடவடிக்கைகள் எடுப்பதில் ஈடுபாடாகவுள்ளதாக அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார். (உ-12)

## யுவதிகளைக் காணவில்லை

(வவுனியா)

வவுனியா பூந்தோட்ட எட்டாம் பிரிவில் வசித்துவந்த இரண்டு யுவதிகள் ஜனவரி 9 ஆம் திகதி முதல்காணாமல் போயிருப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜோஜ் சுகந்தினி (வயது18) செல்வராஜா லோஜி ஆகியோரே காணமல் போனவர்களாவர். (உ-5,

## கடவுச் சீட்டுப் பெறுவதற்கு கொழும்பு சென்றோர் வீடுதிரும்பவில்லை

(கொழும்பு)

கடவுச் சீட்டுப் பெறுவதற்காக மட்டக்களப்பிலிருந்து கொழும்பு சென்ற தாயும் மகனும் எட்டுத்தினங்களாகியும் இன்னும் வீடுதிரும்பவில்லையென மட்டக்களப்பு தேசிய மனிதஉரிமைஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு திருப்பெருந்துறை முருகன் கோவில் வீதியைச் சேர்ந்த இ செல்வராணி (வயது 42), இ உதயராஜ் ஆகிய இருவருமே வீடு திரும்பவில்லையென முறைப்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. (செ)

## நாணய தொலைபேசிகள் நான்கு செயலிழப்பு

(ஆவரங்கால்)

நல்லூர் பிரதேசத்தில் பொதுமக்களின் வசதி கருதி பொருத்தப்பட்ட ஐந்து நாணயத் தொலைபேசிகளில் ஒன்று மட்டுமே தற்போது பாவனைக்கு உகந்ததாக காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நல்லூர் ஆலய முன் வீதிப் பகுதியில் பொருத்தப்பட்ட நாணயத்தொலைபேசி மட்டுமேஇயங்குவதுடன், ஏனையவற்றை பொருத்திய இடங்களில் காணமுடிவதில்லை.

இந் நிலையில், இயங்குகின்ற ஒரேயொரு நாணயத் தொலைபேசியை மட்டுமே அனைவரும் பயன்படுத்தும் நிலை எழுந்துள்ளது.

அத்துடன் மாலை 7 மணிக்குப்பின் இத்தொலைபேசி பூட்டப்பட்டு விடுவதால் அதற்குப்பின் பாவிக்க முடியாத நிலை காணப்படுகிறது.

(உ-57)

## கவிஞர் முருகையனுக்கு நீர்வேலி சமூகம் பாராட்டு

அறிஞரும், கவிஞருமான இராமுப்பிள்ளை முருகையனுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கௌரவ இலக்கிய கலாநிதிப்பட்டத்தை வழங்கியமை குறித்து நீர்வேலிச் சமூகம் அவருக்கு பாராட்டு விழா ஒன்றினை இன்று ஏற்பாடு செய்துள்ளது.

ஒய்வு பெற்ற அதிபர் த. வேலுப்பிள்ளை தலைமையில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் பி ப 1.30 மணியளவில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் அறிஞர்கள் பலரும் கலந்து கொண்டு வாழ்த்துரை, பாராட்டுரை பரிசில்களை வழங்குவதுடன், பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கவுள்ளனர். (உ)

அமெரிக்க ஜனாதிபதி கிளின்டன்

## பரிசுப் பொருட்களை திருப்பி ஒப்படைத்தார்

(வாஷிங்டன்)

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் வெள்ளை மாளிகையிலிருந்து எடுத்துச் சென்ற பரிசுப் பொருட்கள் அனைத்தையும் திருப்பிவெள்ளைமாளிகைக்கு ஒப்படைத்துள்ளார்.

கிளின்டன் பரிசுப் பொருட்களை எடுத்துச் சென்றமை பற்றி அரசியல்வாதிகளும், ஊடகங்களும் கண்டனம் தெரிவித்தமையினாலேயே இவ்வாறு திருப்பி ஒப்படைத்துள்ளார்.

ஆனால் நூற்றிமுப்பதாயிரம் டொலர் பெறுமதியான பரிசுப் பொருட்களுக்குப் பதிலாக 86ஆயிரம் டொலர் பெறுமதியானபரிசுப்பொருட்களையே திருப்பி ஒப்படைத்துள்ளார்

இப்பரிசுப் பொருட்கள் கிளின்டனின் தனிப்பட்ட பரிசுப்பொருட்களா? அல்லது வெள்ளைமாளிகைக்குரியதா? என்பது பற்றிய சர்ச்சை இன்னமும் தீரவில்லை. (செ)

## தமிழ் எழுத்தாளர் சாவி காலமானார்

(சென்னை)

பிரபல தமிழ் எழுத்தாளர் சா.விஸ்வநாதன் கடந்த வெள்ளிக்கிழமை தமது 85 வது வயதில் காலமாகி விட்டார்.

சாவி என்று அழைக்கப்படும் இவர் ஆனந்தவிகடன் பத்திரிகையின் ஆசிரியராகப் பணி புரிந்ததுடன சாவி என்ற பெயரில் தமிழ் வாரப்பத்திரிகைஒன்றையும் நடத்தினார்.

பலநகைச்சுவைக் கட்டுரைகளையும், பயணக்கட்டுரைகளையும் இவர் எழுதியுள்ளார்.

வாஷிங்டனில் திருமணம் என்னும இவரது நகைச்சுவைக்கதை மிகவும் பிரபல்யம் பெற்ற நகைச்சுவைக் கதையாகும். (செ)

## குஜராத்தில் பூகம்பம் உலகசந்தையில் பாதிப்பு

[புதுடில்லி]

அண்மையில் குஜராத்தில் இடம் பெற்ற பூகம்பத்தினால் உலகச் சந்தை பெரும் பாதிப்படைந்துள்ளது என லண்டன் ஆய்வாளர்கள் கருத்துதெரிவித்துள்ளார்கள்.

இந்தியாவின் பெரிய துறைமுகங்களில் ஒன்றான குஜராத்தின் பிரதான துறைமுக மூடாக மேற்கத்தேய நாடுகளுக்கு பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன.

வைரம் மற்றும் பட்டை தீட்டுதல் போன்ற தொழில்கள் குஜராத்திலே அதிகம் இடம் பெறுவதால் பெருமளவு தங்கம் குஜராத்திலே கொள்வனவு செய்யப்படுகிறது.

இதனால் பூகம்பத்தைத் தொடர்ந்து உலக சந்தை பெரும் பாதிப்படைந்துளளது என ஆய்வாளர்கள் தெரிவித்தனர். (உ-7)

## மூப்பனார் சோனியா டில்லியில் சந்திப்பு

(புதுடில்லி)

தமிழ் மாநிலக் காங்கிரஸ் தலைவர் ஜி கே மூப்பனார் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியை டில்லியில் சந்தித்துப் பேசியுள்ளார்.

சட்டப் பேரவைத் தேர்தலில் பின்பற்ற வேண்டிய உத்திகள் பற்றி விவாதிப்பதற்கே இருவரும் சந்தித்ததாக மூப்பனார் தெரிவித்துள்ளார்.

அ. தி. மு. க. வில் பா. ம. கட்சித் தலைவர் ராமதாஸ் இணைந்துள்ள இவ்வேளையில் இடம்பெற்ற இவ்விரு தலைவர்களினதும் சந்திப்பு முக்கியத்துவம் உடையதாகக் கருதப்படுகிறது. (உ-2)

## ஐ.நாவின் கோரிக்கையை பாகிஸ்தான் நிராகரித்தது

(இலண்டன்)

ஆப்கான் நாட்டில் இடவசதியின்றி தவிக்கும் அகதிகளை தங்கவைப்பதற்கு வசதியான அகதிமுகாம் ஒன்றை அமைக்குமாறு ஐ நா சபை பாகிஸ்தானிடம் விடுத்தகோரிக்கையைபாகிஸ்தான் நிராகரித்துள்ளது

பாகிஸ்தானில் 1 இலட்சத்து 70 ஆயிரம் ஆப்கான் அகதிகள் இருப்பதாகவும், அவர்களில் 80 ஆயிரம் அகதிகள் இடவசதியின்றிக் கஷ்டப்படுவதையடுத்தே ஐ நா சபை இக்கோரிக்கையை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ)

## இஸ்ரேலில் மீண்டும் பிரதமர் தேர்தல்

(ஜெருசலேம்)

இஸ்ரேலின் புதிய பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஏரியல் ஷரோன் 45 தினங்களுக்குள் புதிய அரசாங்கத்தை அமைக்காவிட்டால் மீண்டும் ஒரு தேர்தலுக்கு வழி வகுக்கும் எனத் தெரிவிக்கபபடுகிறது.

தேர்தல் முடிவுகள் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டதிலிருந்து ஒன்றரை மாதகாலத்துக்குள் புதிய அரசாங்கத்தை அமைக்கத் தவறினால் இருமாத காலத்துக்குள் மீண்டும் தேர்தல் நடாத்த வேண்டிய சூழல் ஏற்பட்டு விடும் எனவும்,

ஷரோனின் வலது சாரிக் கட்சி இதரகட்சிகளுடன் இணைந்து ஆட்சியமைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (செ)

ராஜீவ்காந்தி

# கொலை வழக்கு குற்றவாளிகள் உயிர் ஊசலாடும் நிலையில்

(புதுடில்லி)

இந்திய முன்னாள் பிரதமர் ரஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு மரணதன்டனை விதிக்கப்பட்ட நால்வரின்நிலை இன்னமும் ஊசலாடும் நிலையிலேயே உள்ளது.

ராஜீவ் காந்தி கொல்லப்பட்டு பத்து வருடங்கள் சடந்து விட்ட நிலையிலும் இந் நால்வரின் நிலை நூல் இழையில் ஊசலாடுகிறது

இந் நால்வரும் தம்மீது கருணை காட்டுமாறு கோரும் கருணை மனு ஒன்றினை இந்திய ஜனாதிபதி கே. ஆர். நாராயணனிடம் சமர்ப்பித்திருந்தனர்.

ஆனால் இவர்களுடைய மனுக்கள் எங்கே என்பது பற்றி இன்னமும் தமக்கு எவ்வித தகவலும் தெரிவிக்கப்படவில்லை எனசிறைஅதிகாரி ஒருவர் தெரிவித்துளளார்.

குற்றஞ்சாட்டப்பட்ட இந் நால்வரின் ஒருவரான நளினிக்கு குழந்தை ஒன்று இருக்கும் காரணமாக நளினியின் மரண தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்படலாம் என மாநில மந்திரி சபை செய்த விதப்புரையை ஆளுநர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

இவர்களின் கருணைமனுக் குறித்து ஜனாதிபதியின் முடிவு பற்றி சட்டத்தரணிகள் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். (செ)

## செய்திப்பரல்

★ வெள்ளை மாளிகையின் தென் பகுதி பூங்காவிற்குள இனந் தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம்.

★ பரிசுப் பொருட்களை கிளின்டன் திருப்பி ஒப்படைத்துள்ளார்.

★ ஏரியல் ஷரோன் மனைவியின் கல்லறைக்கு விஜயம்.

★ பூஜ் நகரில் பூகம் பத்தால் கொல்லப்பட்டவர்களுக்காக அக்கினி வளர்த்து பிரார்த்தனை நடத்தப்பட்டது.

★ இந்தியாவிடமிருந்து காஷ்மீரை பிரிக்க முடியாது என்று பாரூக் அப்துல்லா கூறியுள்ளார்.

## சமாதானத் தூதுவர்

(புதுடில்லி)

இந்தியாவின் புகழ் பெற்ற மூத்த டெனிஸ் வீரர் விஜய் அமிர்தராஜ் ஐக்கிய நாடுகளின் சமாதானத் தூதுவராக நியமிக்சப்பட்டிருப்பதாக செயலாளர் நாயகம் கொபி அனான் அறிவித்துள்ளார். [உ-7]

## தற்கொலையை நாடும் குஜராத் மக்கள்

[புதுடில்லி]

இந்தியாவின்குஜராத் மாநிலத்தில்,அண்மையில் ஏற்பட்ட பூமியதிர்சியின் பின்னர் குஜராத்மக்கள் தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

இப்பூமிபதிர்ச்சியின் பின்னர் உறவினர்களையும், உடமைகளையும் இழந்த பின் விரக்தியின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டு தற்கொலையைத் துணையாகக் கொள்கிறார்கள்.

இதே வேளை, கடந்தவியாழக்கிழமை அகமதாபாத் நகரில் மீண்டும் ஒரு பூமியதிர்ச்சி ஏற்பட்டது இதன் போது கிலி பிடித்த நிலையில் குஜராத் மக்கள் பலர் அடுக்குமாடிக் கட்டடங்களில் இருந்துக் கீழே குதித்து காயங்களுக்கு உளளாகினர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. [செ]

## பசுபிக்கில் விழ இருக்கும் மிர் விண்வெளிக்கலத்தை பார்க்க பலரும் ஆர்வம்

[இலண்டன்]

அடுத்தமாதம் பசுபிக் பிராந்தியத்தில் விழ இருக்கும் ரஷ்ய மிர்விண்வெளிக் கலத்தைப் பார்ப்பதற்காக ஆர்வமுள்ள 120 பேர் விமானம் ஒன்றை வாடகைக்கு அமர்த்தியுள்ளனர்.

இதில் கூடிய ஆர்வமுடையவர்களாக உள்ளவர்கள் ஆராட்சியாளர்கள் என்றும் இவர்கள் பல ஆயிரக்கணக்கான செலவில் விமானத்தை அமர்த்தியுள்ளார்கள் என்று தெரிவித்துளளனர்.

21ஆ நூற்றாண்டின் மறக்கமுடியாத இச் சம்பவத்தை வானத்தில் இருந்தவாறே நேரில் கண்டுகழிக்க முடியும்.

130 தொன் நிறையுள்ள இவ் மிர்விண்வெளிக்கலம் 16 ஆண்டுகளாக விண்வெளியில் பயணஞ் செய்தது. மார்ச் மாதம் நடுப்பகுதியில் இவ் விண்வெளிக்கலம் பூமிக்கு கொண்டு வரப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (செ)

## மனைவியின் கல்லறைக்கு ஷரோன் விஜயம்

[ஜெருசலேம்]

புதிய இஸ்ரேலியப் பிரதமர்ஏரியல் ஷரோன் தேர்தலில் வெற்றியீட்டியதும் காஸாவுக்கு அருகில் அமைந்துள்ள அவரது மனைவியின் கல்லறைக்கு விஜயம் செய்தார்.

அத்துடன் ஜெருசலேத்தின் மேற்குச் சுவரில் பிரார்த்தனை செய்வதுடன், யூத மதத்தின் மிக புனிதமான இடத்திலிருந்து பிரார்தனைப் புத்தகம் வாசித்தார். [செ-08]

## குற்றம் புரியாமல் சிறைத் தண்டனை

எதுவிதமான குற்றமும் புரியாது 27 வருடம் சிறைத் தண்டனையை அனுபவித்தவர் கடந்த புதன்கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவ்விநோத சம்பவம் இலண்டனில் நடைபெற்றுள்ளது.

ஸ்டீபன் டௌனிங் [வயது 44] என்பவர் 1973 ஆம் ஆண்டு வின்டி சீவெல் என்ற பெண்ணைக் கொலை செய்தார் என்னும் குற்றச்சாட்டிலேயே சிறைவாசம் அனுபவித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (செ)

## உலக தரிசனம்

## சிறுவரைத் தத்தெடுக்க அனுமதிக்க முடியாது இந்தியா அறிவிப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியின் போது பாதிக்கப்பட்ட குழந்தைகளைத் தத்தெடுப்பதற்கு ஒரு போதும் அனுமதியளிக்க முடியாது என இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

அரச சார்பற்ற அமைப்பு ஒன்று வெளிநாட்டிலுள்ள குழந்தை பராமரிப்பு நிறுவனம் ஒன்றிற்கு குழந்தைகளைத் தத்தெடுத்துக் கொடுக்க முன்வந்ததை அடுத்தே இந்திய அரசு இவ்வாறு அறிவித்துள்ளது.

இதேவேளை. தமிழ் நாடு சிவானந்த அனாதை இல்லம் 50 குஜராத் குழந்தைகளை தத்தெடுத்தமை குறிப்பிடத்தக்கது. (செ)

## 79 பேரை சுறா தாக்கியது

(வாஷிங்டன்)

உலகம் முழுவதிலுமுள்ள கடற்பரப்பில் வாழும் ஆட்கொல்லிச் சுறாக்கள் கடந்த வருடம் 79 பேரை தாக்கியுள்ளதாக அமெரிக்கப் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

1958 ஆம் ஆண்டிற்குப்பின்னர் இடம பெற்ற அதிகமான தாக்குதல் சம்பவம் இதுவெனத் தெரிவிக்கப்படுகிறது.

சுறாவின் தாக்குதலுக்கு இலக்காகி பலர் உயிரிழந்துள்ளதாகவும் இப் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது. (செ)

## 15 வது நினைவுதினம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் வண பிதா மேரி வஸ்ரியன் அடிகளாரின் 15 வது ஆண்டு நினைவுதினம் அனுட்டிக்கப்பட்டது.

திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மிகவும் அமைதியான முறையில் இரங்கல் திருப்பலி நடைபெற்றது.

1985 ஆம் ஆண்டு வங்காலையில் இவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

காதன்மை சந்தா அறிவறி
யார்த் தேறுதல்
பேதைமை யெல்லாம் தரும்.

- குறள் -

# வலம்புரி

## துன்பத்திலும் துன்பம்

வடக்குக் கிழக்கு மாகாணத்திலுள்ளதேசிய கல்வியியல் கல்லூரிக்கான நேர்முகப்பரீட்சை நடந்து அனுமதி பெற்றவர்களின் பெயர் விபரங்களும் வெளியாகிவிட்டது. அனுமதி பெற்றவர்கள் போக எஞ்சியவர்களின் - ஏமாற்றம் அதனால் அவர்கள் அனுபவிக்கும் துன்பம் எல்லாம் உயர் கல்வியாளர்களின் அறியாமை தந்த விளைவென்றால் அது பிழையல்ல.

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் . தோற்றிப் பல்கலைக்கழக அனுமதிக்காக ஏங்கி ஏங்கி காலத்தைக் கழித்தவர்கள் தரப்படுத்தல் என்ற மட்டம் தட்டும் வேலையால் உளரீதியாக பாதிக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு பல்கலைக்கழக அனுமதிக்கான சந்தர்ப்பங்களை இழந்தவர்களும் ஏதோ அது இல்லை என்றால் இது என்ற வகையில் ஆறுதல் அடையக்கூடியதாக நாட்டில் தேசிய கல்வியியல் கல்லூரிகள் தோற்றம் பெற்றன.

இக்கல்லூரிகளின் அனுமதிக்காக மீண்டும் வெட்டுப்புள்ளிகள். பரவாயில்லை ஏதோவொரு எல்லைப்புள்ளி தேவை என்று தான்பலர்ஆறுதல் அடைந்தார்கள். ஆனால் வேதனை என்னவெனில் கல்வியியல் கல்லூரி அனுமதிக்காக பாடரீதியாக வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்ட போதிலும் அதற்குள்ளும் ஒருநேர் முகப்பரீட்சை தேவையான வெட்டுப்புள்ளிகள் பெற்றவர்களுக்கு தேசிய கல்வியியல் கல்லூரிக்கு அனுமதிகிடைக்கவில்லை பல்கலைக்கழக அனுமதி தான் கிடைக்காமல் பறிபோனதென்றால் தேசிய கல்வியியல் கல்லூரி அனுமதிக்கு அறிவிக்கப்பட்ட வெட்டுப்புள்ளி பெற்றிருந்தும் அனுமதி கிடைக்காமல் போனது ஏன் என்ற கேள்வி பாதிகக்ப்பட்ட மாணவர்களிடம் இருந்து எழுவது நியாயமானதே.

பல் கலைக்சழகத்திற்கு அறிவிக்கப்பட்ட வெட்டுப் புள்ளிகள் பெற்ற மாணவர்கள் அனைவரும் அனுமதி பெறும் போது கல்வியியல்கல்லூரிக்குமட்டும் ஏன்புது முறையென பாதிக்கப்பட்ட மாணவர்கள் கேள்வி தொடுப்பதும் நியாயமானதே.இதற்குரியவர்கள் உரியமுறையில் பதில் அளிப்பது கட்டாய கடமையாகும்.

---

**பரமபிதா காட்டிய பாதை**

# உன்னை நீ நேசிப்பதுபோலப் பிறரையும் நேசி

# உண்மை வாழ்வை உலகில் காணலாம்



முழுமனதோடு கர்த்தரைத் தொழு நீங்கள் கைக்கொள்ள வேண்டுமென்று அவர் உங்களுக்குக் கட்டளையிட்ட பத்து கட்டளைகளாகிய தம்முடையஉடன்படிக்கையை அறிவித்து அலைகளை இரண்டு கற்பலகைளிலும் எழுதினார். இந்த இரண்டு கற்பனைகளிலும் ஒன்றில் நாலும் மற்றையதில் ஆறுமாக எழுதியிருந்தார். ஆறு கற்பனை மனிதனாகிய நமக்கும், நாலு கற்பனை நம்மைப் படைத்த தேவனுக்கும் என்று பகுத்துக் கொடுத்திருக்கிறார்.

### உன்னைப் போல் பிறரையும் நேசி

உன்முழுஇருதயத்தோடும், உன்முழு ஆத்மாவோடும், முழுப் பலத்தோடும், உன் தேவனாகிய கர்த்தரை தொழுதுகொள், அதற்கு நிகராக உன்னை நீ நேசிக்கிறது போல பிறரையும் நேசி, இதற்குள் கற்பனை முழுவதும் அடங்கும்என்றார். எவ்வளவு அருமையான வார்த்தை, உன்னைப்போல பிறரை நேசி என்றால், அப்படி நேசிக்கிறவன், கொலை செய்யான், பொய் சொல்லான், விபச்சாரம் செய்யான், தாய், தகப்பனுக்கு துன்பம் செய்யான், பிறருடையதொன்றையும் இச்சியான், இப்படிஒவ்வொரு மனிதனும் இருப்பானென்றால் உலகத்தில் இப்போ இருக்கும்துன்பமொன்றுமிருக்காது. சற்றுச் சிந்தித்துப் பாருங்கள் ஒவ்வொருவனும் தன்னைச் சினேகிப்பதுபோல பிறரையும் சினேகித்தால் கர்த்தரை முழுமனதோடு தொழு என்று சொல்லழந்திதாமாகவே அதைச் செய்வான் நாம் ஒருவரில் ஒருவர் அன்பு கூர வேண்டுமென்பதே நீங்கள் ஆதிமுதலாய்க்கேள்விப்பட்ட விசேஷமாயிருக்கிறது. நாம் மற்றவர்களைச் சினேகிக்கும்போது தேவ அன்பு தாமாகவே சுரக்கும் அன்பு கூருவதனால் பாவம் நீங்குகிறது, பரிசுத்தம் ஏற்படுகிறது. பரிசுத்த மேற்படுகிறபொழுது தேவ பிரசன்னம் ஏற்படுகிறது. இந்த மூன்றெழுத்துக்குள் அடங்கும் அன்பு இந்த உலகங்களையும் அதற்குள் அடக்குகிறது. அன்பிற்குமுண்டோ அடைக்கும் தாழ் அன்புக்குப் பொறாமையில்லை, வஞ்சனையில்லை, தற்பெருமையில்லை, வீம்பு இல்லை, தன்சுயத்தைச் சிந்தியாது பிறர் சுயத்தையே சிந்திக்கும் இப்படி ஒவ்வொரு மனிதனும் சிந்தித்துச் செயற்பட்டால், கர்த்தராகிய யேசு கிறிஸ்து இந்தப் பூமிக்கு மனிதப் பிறவி எடுத்து வந்து, எம்மேல் கொண்ட அன்பை சிலுவை பரியந்தம் தம்மைத் தாழ்த்தி, தன் உயிரையே கொடுத்து எம்மை மீட்பதற்கு அவர் செய்த தியாகத்திற்கு மதிப்புண்டாகும்.

### கர்த்தர் யேசுவைத் தொழுவோம்

நாம்ஒவ்வொருவரும்எங்கள் சுயத்துக்கு கேடு உண்டாகக் கூடாதென்று விரும்புகிறோம். அதுபோல் மற்ற மனிதருக்கும் இருக்கவேண்டுமென்று நாமே விரும்பி அதை செயல்ப்படுத்தவேண்டும். அப்படி செயற்பட்டால், முழு இருதயத்தோடும் முழுப்பலத்தோடும், முழுஆத்துமாவோடுஇந்தஉலகத்தைப்படைத்து எங்களையும் எங்களுக்கு வேண்டியவைகளையும் படைத்து. நாம் சந்தோசமாகவும், சமாதானமாகவும் வாழ வழி சமைத்துத்தந்த கர்த்தராகிய யேசுவை நாம் தொழுது கொள்ளுவோம்.

எல்லா நன்மைக்கும் காரணமாகிய அன்பை

**மு.கிருஸ்ணன்**
மட்டுவில்

பெருக்கி, எமைத்தடுத்தாட்கொண்ட, இன்பப்பெருக்கே இறையே யேசுவே பாவவழியில் சென்று மாண்டுகொண்டிருந்த மானிடரில் கொண்ட அன்பினால், மனுவாகி எம்மைத்தடுத்து, பரிசுத்த வழியில் நடந்து காட்டிய இறைவன் யேசுவை முழுமன தோடும் தொழுது இம்மையிலும் மறுமையிலும் மகிமை பெற்று பெருவாழ்வு வாழ்வோமாக ஆமேன்.

---

# மனிதனின் குண இயல்புகளை அப்பட்டமாக

# வெளிக் கொணரும் எண் சோதிடக்கலை

**பேராசிரியர் என். சாமி**

(சென்றவாரத் தொடர்ச்சி)

### பிறந்தஎண் 7- விதிஎண் 1

இவர்கள் ஆடம்பரப் பொருள், உலோகம், வாகனம் போன்ற தொழிலில் ஈடுபடலாம். மற்றும் கல், கமிஷன் ஏஜென்ட் வேலையும் இவர்களுக்குப் பொருந்தும் அல்லது இவை சம்பந்தப்பட்ட இடத்தில் வேலைக்கமர்ந்து பெரும் பொருள் ஈட்டலாம்.

### பிறந்தஎண் 7- விதிஎண்-2

இவர்கள் எழுத்தாலும், பேச்சாலும் பொருள் திரட்டுவர். மற்றும் பகட்டுப் பொருட்கள், பச்சைப் பொருள்கள், கலை சம்பந்தமான பொருள், துணி போன்றவற்றாலும் செல்வம் சேர்ப்பர். அல்லது இவை சம்பந்தப்பட்ட இடத்தில் இவர்கள் உத்தியோகத்தில் அமர்ந்து திரண்ட செல்வம் சேர்க்கலாம்.

### பிறந்தஎண் 7- விதிஎண் 3

இவர்களுக்குத் திரவப் பொருள், மருந்து வியாபாரம், ஒப்பந்த வேலைகள் போன்ற தொழில் மிகவும் பொருந்தும். மற்றும் கல், கமிஷன் ஏஜென்ட் போன்ற தொழில்களிலும் முன்னேறலாம். அல்லது இவை சம்பந்தப்பட்ட இடங்களில் உத்தியோகத்தில் அமர்ந்து திரண்ட செல்வத்தைச் சேர்க்கலாம்.

### பிறந்தஎண் 7- விதிஎண் 4

இவர்கள் எழுத்தாலும், பேச்சாலும் பொருள் ஈட்டுவர். மற்றும் கல், ஆடம்பரப்பொருள், பத்திரிகை, புத்தகம் போன்றவற்றால் இவர்கள் பெரும் பொருள் ஈட்டுவர். அல்லது இவை சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளில் உத்தியோகத்திலமர்ந்து வாழ்க்கையில் உயரலாம்.

### பிறந்தஎண் 7- விதிஎண் 5

இவர்கள் பேச்சாலும், எழுத்தாலும் பெரும் பணம் சம்பாதிப்பார்கள். மற்றும் பச்சைநிறப் பொருள்கள் விற்பனையினாலும், கல், மருந்து, ஒப்பந்த வேலைகள் கமிஷன் போன்றவற்றாலும் நல்ல சம்பாத்தியம் இருக்கும். அல்லது இவை சம்பந்தமான இடத்தில் வேலைக்கமர்ந்து பொருள் ஈட்டுவார்கள்.

### பிறந்தஎண் 7- விதிஎண் 6

இவர்கள் ஆடம்பரப் பொருள் விற்பனையினாலும், ஜவுளி, மருந்து, ஒப்பந்த வேலைகள், கமிஷன் தொழிலாலும் நிறையச் சம்பாதிப்பர். சிலர் பேச்சாலும், எழுத்தாலும், பச்சைப் பொருள் விற்பனையினாலும் பொருள் ஈட்டுவர். அல்லது இவை சம்பந்தப்பட்ட இடத்தில் வேலைக்கமர்ந்து பொருள் ஈட்டுவர்

### பிறந்தஎண் 7- விதிஎண் 7

இவர்கள் வக்கில் தொழிலில் நிறையச் சம்பாதிக்கலாம். மற்றும் மருந்து, ஒப்பந்த வேலைகள், கமிஷன் தொழிலும் சம்பாதிக்கலாம். அல்லது இவை சம்பந்தமான வேலையிலமர்ந்து பொருள் ஈட்டலாம்.

### பிறந்தஎண் 7- விதிஎண் 8

இவர்களிற்குப் பேச்சும், எழுத்தும் மிகவும் பொருந்தும். மற்றும் கல், ஒப்பந்தத் தொழிலும் முன்னேறுவார்கள். அல்லதுஇந்தத் தொழில் நடக்கும்இடங்களில் வேலைக்கமர்ந்து பெரும் பொருள் ஈட்டுவார்கள்.

### பிறந்தஎண் 7- விதிஎண் 9

இவர்களுக்கு வக்கில தொழில் நிரம்பப் பொருந்தும். மற்றும் இரும்பு, பேச்சு, எழுத்து, கமிஷன், ஒப்பந்தத் தொழில் மூலமாகவும் நல்ல வருவாய் பெறுவர். அல்லது இவை சம்பந்தமான இடத்தில் வேலைக்கமர்ந்து நல்ல வருவாய் பெறலாம்.

### பிறந்தஎண் 8- விதிஎண் 1

இவர்கள் இரும்பு சம்பந்தமான தொழில், எழுத்து, புத்தக வெளியீடு, ஒப்பந்தத் தொழில், விளம்பரம், பேசிச் சம்பாதிக்கும் தொழிலிலும் முன்னேறுவர், அல்லது இவை சம்பந்தப்பட்ட இடத்தில் வேலைக்கமர்ந்து செல்வம் ஈட்டலாம்.

### பிறந்தஎண் 8- விதிஎண் 2

இவர்கள் பகட்டுப் பொருள், பாக்கெட் பொருள், விற்பனையினாலும், ஒப்பந்தத் தொழிலாலும் பெருஞ் செல்வம் ஈட்டுவர். மற்றும் இரும்பு, மெக்கானிசம் தொழிலும் இவர்களுக்குப் பொருந்தும். அல்லது இவை சம்பந்தப்பட்ட இடத்தில் வேலைக்கமர்ந்து பெரும் பொருள் ஈட்டலாம்.

### பிறந்தஎண் 8- விதிஎண் 3

இவர்கள் கை நுணுக்கத் தொழில், கலை சம்பந்தமான தொழில், ஒப்பந்தத் தொழில் முதலியவற்றில் முன்னேறலாம் மற்றும் இருப்பு, வாகனம், கமிஷன், போக்குவரத்து தொழிலிலும் மேன்மையடையலாம்.

அல்லது இவை சம்பந்தப்பட்ட இடங்களில் உத்தியோகத்தில் அமர்ந்து வாழ்க்கையில் உயரலாம்,

### பிறந்தஎண் 8- வி.எண் 4

இவர்கள எழுத்தாலும், பேச்சாலும் முன்னேறுவர். மற்றும் பத்திரிகை, இரும்பு,

## சோதிடபலன்

வாகனப், ஒப்பந்தத் தொழிலும் இவர்களுக்குப் பொருந்தும்.அல்லது இவை சம்பந்தமான இடத்தில் உத்தியோகத்தில் அமர்ந்து வாழ்க்கையில் உயரலாம்.

### பிறந்தஎண் 8- விதிஎண் 5

இவர்கள் நல்ல எழுத்தாளர், பேச்சாளர். அதன் மூலம் நல்ல வருவாய் கிட்டும். மற்றும் மருந்து, வாகனம், ஒப்பந்த வேலைகள், கல் தொழிலிலும் முன்னேறலாம் அல்லது இவை சம்பந்தப்பட்ட இடங்ளில் வேலைக்கமர்ந்து பெரும் பொருள் ஈட்டலாம்.

### பிறந்தஎண் 8- விதிஎண் 6

இவர்கள் ஆடம்பரப் பொருள், பச்சைப்பொருள், ஜவுளி, மருந்துத் தொழில்களில் முன்னேறலாம் மற்றும் கமிஷன், ஒப்பந்த வேலைகள் இவர்களுக்குப் பொருந்தும். அல்லது, இவை சம்பந்தப்பட்ட இடங்களில் வேலைக்கமர்ந்து பெரும் பொருள் ஈட்டலாம்.

### பிறந்தஎண் 8- விதிஎண் 7

இவர்கள புத்தகம் வெளியிடும் தொழிலில் முன்னேறலாம். இரும்புத் தொழிலும் பொருந்தும் மற்றும் எழுத்து பேச்சு, ஒப்பந்தத் தொழிலி

→2ஆம் பக்கம் பார்க்க

நங்கையின் புன்னகை
விதுஷாவின்
பொன்னகையில்
உங்களின் எண்ணம் அதுவே
விதுஷாவின்
கைவண்ணம் - நாடுங்கள்
ஊர்காவற்றுறையில்
உங்கள்
விதுஷா
நகைமாடம்
(கி/1470)

# கடந்த 10 ஆண்டுகளில் வன்னியில் 19,414பேர் அகாலமரணம்

# 12,000 மாணவர் ஊனமுற்றனர்

(வவுனியா)

வன்னிப்பிரதேசத்தில் மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் கடந்த பத்துவருடங்களில் 19,414பேர் அகால மரணமடைந்துள்ளதாக வன்னியில் திரட்டப்பட்ட புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த பத்து ஆண்டுகளில் வவுனியாவில் மட்டும் ஆறாயிரத்து முப்பத்தைந்து பேர் அகால மரணமடைந்துள்ளனர். இவர்களில் யுத்தத்தினால் இரண்டாயிரத்து 384 பேர் மரணமடைந்துள்ளனர்.

தொடரும் போரினால் 12 ஆயிரம் தமிழ் மாணவர்கள், ஊனமடைந்திருப்பதாகவும், முல்லைத்தீவில் 6 ஆயிரத்து 158 மாணவர்களும், மன்னாரில் ஆயிரத்து 154 மாணவர்களும், கிளிநொச்சியில் 4 ஆயிரத்து நாற்பத்து மூன்று மாணவர்களும் ஊனமடைந்துள்ளதாக அப்புள்ளி விபரங்கள் மேலும் தெரிவிக்கின்றன;

இதேவேளை ஊனமடைந்த மாணவர்களில் 4 ஆயிரத்து 32 மாணவர்கள் செயற்கை அவயங்களைப் பொருத்த வேண்டிய நிலையில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது!

[வ

மங்கையர் மனங்களைக்
கொள்ளை கொள்ளும்
தங்க நகைகளைப்
பெற்றுக்கொள்ள
நியூ நகுலா
ஜுவல்லறி
74, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
[கி-1477]

## பிரச்சினையை தீர்க்க முஸ். காங்கிரஸ் அழுத்தம்

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசைச்சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் தேசிய பிரச்சினையைத் தீர்த்து வைக்குமாறு நாட்டின் அரசியல் தலைவர்களுக்கு அழுத்தம் கொடுக்க உள்ளனர். இதற்கு வசதியாக எட்டுப் பேர் கொண்ட குழு ஒன்றை அவர்கள் அமைத்துள்ளனர்.

இக்குழு விரைவில் ஜனாதிபதி, பிரதம மந்திரி மற்றும் அமைச்சர்களான பேரியல் அஷ்ரப், ரவூப் ஹக்கிம் ஆகியோரைச் சந்தித்து இது குறித்துப்பேசவுள்ளது.

(ந-4)

## படையினரின் வலிந்த தாக்குதலில் உயிரிழந்தோர் விபரம்

(வவுனியா)

மன்னார் பரப்புக்கடந்தான் பகுதியில் கடந்தபுதன்கிழமை தற்செயலாக ஏற்பட்ட வெடிவிபத்தில்

வீரவேங்கை

★ நித்தியா (சுப்பிரமணியம் சசிக்குமார்) நெடுங்கேணி என்ற போராளியும்.

கடந்த 3 ஆம் திகதி எழுதுமட்டுவாழ்பகுதியில் இராணுவத்தின் வலிந்த தாக்குதலின் போது,

வீரவேங்கைகளான

★ எழில் (செல்லத்துரை மஞ்சுளா தேவி) யாழ்ப்பாணம்

★ கீதா அல்லது செல்வி (பரமலிங்கம் யோகாம்பிகை) யாழ்ப்பாணம் ஆகிய போராளிகளும் தமது தரப்பில் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

(ம)

## இராணுவத் தளபதியுடன் மகேஸ்வரன் எம்.பி சந்திப்பு

(கொழும்பு)

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு உணவு மற்றும் மருந்துப் பொருட்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரன் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் பல்லேகலவிடம் கோரியுள்ளார்.

நேற்று பல்லேகலவுடன் இடம் பெற்ற சந்திப்பின் போது மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் இராணுவத் தரப்பினர் பொது மக்களின் வாகனங்களை பலவந்தமாக பறித்து தமது தேவைக்கு பயன்படுத்துவதனால் மக்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர் எனவே இத்தகைய நடவடிக்கைகளையும் தடுத்து நிறுத்த வேண்டுமென்று அச்சந்திப்பின்போது தி. மகேஸ்வரன் எம்.பி கேட்டுக் கொண்டார்;

இது குறித்து தாம் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

(இ)

கைதாகும்...

வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

அவர் மேலும்தெரிவிக்கையில் கைதுசெய்யப்படும் இளைஞர்களை விடுவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும்சிலசட்டத்தரணிகள் நான்குலட்சம்ரூபா முதல் ஐந்துலட்சம் ரூபாவரை பெறுகின்றனர்.

அதேவேளை தமிழ் இளைஞர்களைக்கைதுசெய்யும் விவகாரத்தில் தவறாக செயற்படும்பொலிஸ்உத்தியோகத்தர்கள் குறித்து தமது கவனத்திற்கு கொண்டுவரப்படும்பட்சத்தில் உரிய நடவடிக்கையெடுக்கப்படுமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ந-4)

ஜனாதிபதி---

கைக்குள் நுழைந்துவிடுவேன் என்ற அச்சம். அச்சம் வேண்டாம் இன்று நான் ஜனாதிபதியின் மாளிகைக்குள்செல்ல மாட்டேன் அவர் நிம்மதியாக நித்திரை செய்யலாம்.

பல மில்லியன் ரூபா செலவில் ஜனாதிபதி மாளிகையொன்றுகட்டுகிறார். உடனே அவர் அக்கட்டுமானப்பணிகளை நிறுத்தவேண்டும். இல்லையேல் மக்கள் சக்தியைத் திரட்டி நான் அதை நிறுத்துவேன்.

மாதக்கணக்காக வெளிநாட்டு உல்லாசப் பயணங்களை மக்கள் பணத்திலே ஜனாதிபதி மேற்கொண்டுள்ளதுடன் மேலும்பல பயணங்களைச் செய்ய ஆயத்தமாகியும் வருகிறார். திறமை வாய்ந்த ஜானக பெரேரா போன்ற இராணுவத் தளபதிகளை ஓய்வில் அனுப்பிய ஜனாதிபதி ஒட்டு மொத்தத்தில போர் நடவடிக்கைகளை பிச்சைக்காரன் புண்ணைப் பாது காப்பது போல் பாதுகாத்து வருகிறார் என்றும் அவர் மேலும் குற்றஞ்சாட்டினார்.

(இ)

★ நாட்டில் பயங்கரவாதம் நிலவும் வரை

# தேடுதலின்போது மக்கள் கஷ்டத்தை அனுபவிப்பது தவிர்க்க முடியாது!

## அமைச்சர் பட்டி வீரக்கோன்

(கொழும்பு)

கொழும்பு பொலிஸ் நிலையங்களில் தமிழ் மக்கள் தம்மைப் பதிவு செய்து கொள்வதில் பலஇன்னல்களை அனுபவிக்க வேண்டியுள்ளது. ஒவ்வொருபொலிஸ் நிலையத்திலும்வெவ்வேறு முறையான நடைமுறைகள் கைக்கொள்ளப்படுவதாலேயேஇத்தகைய கஷ்ரங்களை அனுபவிக்க வேண்டியுள்ளதாக ஆர். யோகராசன் எம்.பி கொழும்பில் நடந்த பொது மக்கள் பொலிஸ் நல்லுறவுக் கருத்தரங்கில் பேசும் போது குறிப்பிட்டுள்ளார்;

கொழும்பு சுகததாச விளையாட்டு விடுதியில் நீதிஅமைச்சர் பட்டி வீரக்கோன் தலைமையில்இக்கருத்தரங்கு நடைபெற்றது.

இக் கருத்தரங்கில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

கொழும்பு வரும் தமிழர் தம்மைப் பதிவு செய்வதற்காக பொலிஸ் நிலையம்செல்லும் சில இடங்களில் தனிநபர் படம் கோரப்படுவதாகவும் இன்னும் சில இடங்களில் குடும்பத்துடன் சேர்ந்து எடுக்கப்பட்ட படம் கோரப்படுவதாகவும் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த பட்டி வீரக்கோன்,

இந்த நாட்டில் பயங்கரவாதம் இருக்கும் வரை தேடுதல் நடவடிக்கைகள் தொடரவே செய்யும் இது தவிர்க்க முடியாததாகும் அறுபத்து மூன்றுசதவீதமாமான பொலிஸார் தற்போதுயுத்தம் நடைபெறும் பிரதேசங்களிலேயே கடமை ஆற்றி வருகின்றனர் 20 வீதமானோரே பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றி வருகின்றனர்.

கொழும்பு பிரதி பொலிஸ்மாஅதிபர் கொட்டகதெனிய கருத்துத் தெரிவிக்கையில்; சில அதிகாரிகள் தவறு விடுவதாகவும் அது குறித்து நடவடிக்கை எடுக்க விருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

(வ)

## வாய் பேசாத சிறுவனின் மரணம் வேதனையானது

நேற்று முன்தினம் இரவு இராணுவத்தின் சூட்டுக்கு இலக்கான வாய்பேச முடி சிறுவன் மகேந்திரன் சுபாஸ்கரனின் மரணம் வேதனைக்குரியது. இத்தகைய அநியாயமான மரணங்களைத் தடுக்க நாம் எல்லோரும் விழிப்புடன் செயற்படவேண்டும்

இவ்வாறு ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட பிரதி அமைப்பாளரும் நல்லூர் பிரதேச சபைத்தலைவருமானக.மணி பல்லவராஜன் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வாய்பேச முடியாத நிலையில் படையினரின் கட்டளையை புரிந்துகொள்ள முடியாமையால் ஏற்பட்ட இம்மரணம் மிகவும்வேதனை அளிப்பதாகவுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ம)

தமிழ்த்...

தூதரகம் வெளியிடுகையில் தற்போதய சூழ்நிலையில் இந்தியா சென்று பிரதமரையோ மற்றும் உள்த்துறை அமைச்சரையோ வெளிவிவகாரஅமைச்சரையோ சந்திக்க முடியாதென நிராகரித்து விட்டது.

இந்தியத் தலைவர்களை நேரில் சென்று சந்தித்துப் பேசுவதென்ற தீர்மானத்துக்கு அமைவாக பதினொரு தமிழ்க் கட்சிகளும் எடுத்த முயற்சிகள் தோல்வியிலேயே முடிந்தது.

இந்தியத்துதரகம் நிராகரித்ததைத்தொடர்ந்து அடுத்த கட்ட நடவடிக்கையில் தமிழ் கட்சிகள் இறங்கியுள்ளன.

இந்தியத் தூதரகத்தின் நிராகரிப்பு சமாதானப் பேச்சுகளில் இந்திய அரசுக்குள்ள அக்கறையீனத்தையே எடுத்துக் காட்டுவதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

(வ)

மாணவரின்

பினர் அசமந்தப் போக்குடன் பல்வேறு காரணங்களைக் கூறிதட்டிக்கழித்து வருவதாக மாணவர்கள் மத்தியில் கவலை தெரிவிக்கப்படுகிறது

(இ-43)

அழகுக்கு மெருகூட்டும்
22 கரட் தங்கத்தில்
ஓடர் நகைகளை
சிறந்த முறையில்
செய்து பெற்றிட
சாரங்கன்
நகைமாடம்
45. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-1478]

அவுஸ்ரேலிய---

விற்குமேஜர்ஜெனரல் ஜானக பெரேராவின் பெயர் சிபார்சு செய்யப்பட்டுள்ளது;

இராணுவத் தளபதிகளாக சேவையாற்றிய லெப்டினண்ட் ஜெனரல்கள் மட்டுமே இதுவரை வெளிநாட்டுத் தூதுவர்களாக நியமிகக்கப்பட்டு வந்தனர். ஆனால் மேஜர்ஜெனரல்ஒருவர் வெளிநாட்டுத் தூதுவராக நியமிக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

(வ)

ராணுவத்தினரின்

மகேந்திரன் சுபாஸ்கரன்(வயது-11) சம்பவ தினத்தன்று நள்ளிரவு வேளை உறவினர் வீட்டில் தொலைக்காட்சி பார்த்துவிட்டு வீடுதிரும்புகையில், இராணுவக்காவலரணில் இராவணுத்தினர் அவரை நிற்குமாறுகுரல் எழுப்பினர்.

வாய்பேசமுடியாத அச்சிறுவன் அதனை விளங்கிக்கொள்ளாது அப்பாற்செல்லமுற்பட்டபோது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக தெரியவருகிறது.

(இ)

புலிகளை---

இலங்கையில் அமைதியை ஏற்படுத்தும் நோக்கில்பேச்சுவார்த்தைக்கு தயார் என விடுதலைப்புலிகள் அறிவித்துள்ள இச்சந்தர்ப்பத்திலும், நோர்வேயின்சமாதான முயற்சிகள் வெற்றிதரக்கூடியநிலையிலும் விடுதலைப்புலிகளை பிரித்தானியா தடை செய்தால் அது இலங்கையில் அமைதி ஏற்படுவதற்கு குந்தகம் விளைவிக்கும்.

எனவே இதனைக் கருத்திற்கொண்டு விடுதலைப் புலிகளைத் தடைசெய்யும் எண்ணத்தில் இருந்து உங்களை விடுவித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதுடன், பிரித்தானியாவுக்கும் இலங்கைக்கும் இடையில், அரசின் கல்வி சம்பந்தமான உறவுகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கும் தமிழ் மக்கள் தமது தேசிய அபிலாஷைகளை அடைவதற்கும் புலிகளை தடை செய்யாமல் இருப்பது அவசியமாகும் எனக் குறிப்பிட்டுள்ளனர்;

இவ் அவசர செய்தியில் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி, என். சிறிக்காந்தா, கலாநிதி என். குமரகுருபன் அ விநாயகமூர்த்தி எம்.பி, மனோகணேசன், எம். எஸ் செல்லச்சாமி எம்.பி, சுரேஷ் பிரேமச்சந்திரன், பாலசண்முகதாஸ், தில்லைக்கூத்தன் நடராசா, மலையக மக்கள் முன்னணி சார்பாக சட்டத்தரணி ராஜகுகேந்திரன், முசியுர்ரவ்மான் ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர்;

ஸ்ரீ செல்வா
(யாழ்ப்பாணம்)
அப்பாஸ் மாதவன்
லைலா விவேக்
நடித்த
மின்னலே
10-30, 2-30 (பு.நே)
(கி/1439)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது